Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 8 (18-8-66) இதழ் 18

பராபவ ஆவணி 2 ஜ: அவ்வ 1 வியாழக்கிழமை

## உள்ளே . . .

பக்கம் 2—3 கி. வா. ஜ. மணிவிழா சிறப்பிதழ்
பக்கம் 6 வெளிநாட்டுச் செய்திகள்
பக்கம் 5,8 சதிவழக்கு விபரம்

# 'பெண் பெயரை சொல்ல வற்புறுத்த முடியாது'

## எதிரிதரப்பு கோரிக்கையை நீதிபதி நிராகரித்தார்

### சதிவழக்கு விசாரணை விபரம்

கொழும்பு, புதன்

கொழும்பு 'எமிற்ற' கிளப்பில் டொறிக் சூசா, சதித்திட்டம் பற்றிய தகவலை பரதிந் தெரிவித்ததை ஒரு பெண் ஊர்ஜிதம் செய்ததாக முடிக்குரிய தரப்பின் முதல் சாட்சி திரு. எம். சந்திரசோமா தெரிவித்ததைத் தொடர்ந்து அப் பெண்ணின் பெயரை வெளியிடுமாறு எதிரி தரப்பு வழக்கறிஞர் விடுத்த கோரிக்கையை பிரதம மாஜிஸ்டிரேட் இன்று நிராகரித்தார்.

தேசிய அரசாங்கத்தைத் கவிழ்க்கச் சதி செய்ததாக குற்றஞ்சாட்டி வண. ஞான சீகதேரோ, முன்னாள் ராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் ரிச்சார்ட் உடுகம உட்பட 23 பேர்மீது தொடரப்பட்டவழக்கு கொழும்பு பிளாக்ஸ் டார்ப் வீதியிலுள்ள விசேஷ நீதிமன்றத்தில் கொழும்பு பிரதம மாஜிஸ்டிரேட் திரு. பி. எஸ். டேவிட் முன்னிலையில் இன்று காலை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

நேற்றைய விசாரணையின் போது சாட்சியமளித்த துறைமுகக் கமிஷனரும் துறைமுகக் கூட்டுத்தாபன தலைவருமான திரு. எம். சந்திரசோமா, சதித்திட்டம் பற்றி செனட்டர் சூசா தமக்குத் தெரிவித்ததகவலை ஊர்ஜிதம் செய்த பெண்ணின் பெயரை வெளியிட தாம் விரும்பவில்லையெனக் கூறினார். அந்தப் பெண்ணின் பெயரை வெளியிட சாட்சியை வற்புறுத்துமாறுநான்காவது எதிரியின் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு திஸா விஜயரத்தின கோரியிருந்தார். இக்கோரிக்கையை ஆதரித்து பன்னிரண்டாவது எதிரியின் சார்பில் ஆஜரான வழக்கறிஞரும் கோரினார்.

**நீதிபதி நிராகரிப்பு**

இன்று காலை நீதிமன்றம் மீண்டும் கூடியபொழுது அந்தப் பெண்ணின் பெயரை வெளியிடவேண்டுமென்ற கோரிக்கையை நீதிபதி நிராகரித்தார்.

இன்று காலை நீதிமன்றம் மீண்டும் கூடியபொழுது முதலாம் எதிரி ஞானசீகதேரோவின் சார்பில் ஆஜரான சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. கே. வி. டி' சில்வாவும், திரு. சந்திரசோமாவின் சாட்சியத்தின் உண்மையைச் சோதிக்க அப் பெண்ணின் பெயரை வெளியிடவேண்டுமெனக் கோரினார். அப்படியொரு பெண் அன்று அந்தக் கிளப்பில் இருக்கவில்லையென்றும் அது சந்திரசோமாவின் கற்பனையில் உதித்த பெண்என்றும் திரு. சில்வா கூறினார். திரு. சந்திரசோமாவின் கதையை செனட்டர் டொரிக் டி'

(5-ம் பக்கம் பார்க்க)

## இ. போ. ச. நியமனம்

கொழும்பு, புதன்

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் மத்திய விஷயாலோசனைக் கமிட்டியின் அங்கத்தவராகத் திரு. ஆர். ஆர். நல்லையா, பதில் தேசியசேவைகள் மந்திரியினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

## இம்முறை மட்டும் பலி நடக்கும்

யாழ்ப்பாணம், புதன்

ஏழாலை இலந்தையடி வைரவர் கோவிலில் வருடந்தோறும் நடைபெற்றுவந்த ஆடு, கோழி பலியிடுதலாகிய வேள்வி முறை இவ்வருடம் மட்டும்தான் நடக்கும் என்றும் இனிமேல் அவ் வேள்விநடைபெறுதென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## 'வெற்று வேட்டு' என்று சொல்லி சுட்டார்

### கிராமவாசி கொலைவழக்கில் சாட்சியம்

கொழும்பு, புதன்

அறுபதுவயது கிராமவாசியான எச். டி. ஆர். விஜயவர்த்தன என்பவரை துப்பாக்கியால் சுட்டதாக பாணந்துறை மோந்தா அன்ட் கம்பனியின் சொந்தக்காரரான குருஸ் பெனடிக்ட் மோதா என்பவர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். இந்தத் துப்பாக்கிச் சூடுசம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மத்துமம தொகுதியைச் சேர்ந்த பொரலிவ பகுதியில் பரகாஸ்ஹந்திய என்ற இடத்தில் நடைபெற்றது.

எதிரியான மோதகளுத்துறைமாவட்டமேலதிக நீதவான் எம். இ. தர்மவர்த்தன முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்.

திரு. எம் டி சிறிசேனஎன்பவர் சாட்சியமளிக்கையில் நானும் ஜயவர்த்தனவும் மேத்தாவின் காணியொன்றைத் துப்பரவாக்கிக் கொண்டிருந்தோம். அந்தக் காணியை ஜெயவர்த்தனவின் சகோதரனிடம் எதிரி சமீபத்தில் வாங்கினர். எதிரி துப்பாக்கியொன்றை விஜயவர்த்தனவுக்கு நேரே திருப்பி "இதொரு வெற்று வேட்டு என்று சொல்லிச் சுட்டார். அவர் கீழே விழுந்து இறந்தார் என்று கூறினர்

மோதாவுக்கு 5 ஆயிரம் ரூபாய் பிணை செலுத்த உத்தரவிடப்பட்டது.

## பொதுமக்கள் பொலிசார் உறவு

கொழும்பு, புதன்

பொலிசாருக்கும் பொதுமக்களுக்குமிடையில் நல்லெண்ணத்தையும் நட்புறவையும் மேலும் வளர்க்குமுகமாக பொலிஸ் சேவைக்குள்ளேயே கிராமத் தொண்டர் இயக்கமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது

ஒரு இன்ஸ்பெக்டர், ஓர் உதவி இன்ஸ்பெக்டர், ஒரு சார்ஜண்ட் ஆகியோரைக் கொண்ட பிரிவுகள் கிராமந்தோறும் ஆரம்பிக்கப்படுகின்றன,

"உயர் அதிகாரிகள

## வெளிநாட்டு தூதரகத்திடம் தகவல் தெரிவித்தார்கள்'

### 'டெலிபோன் ஒற்றுக்கேட்டல்' கமிஷன்முன் டயஸ் சாட்சியம்

கொழும்பு, புதன்

"சில தகவல்களை அறியும் நோக்கமாகத் தொலைபேசியில் பேசிக்கொண்டிருக்கும் போது ஒற்றுக்கேட்டு உள்ளூரிலுள்ள சிலருக்குத் தெரிவித்தல் மோசமானதொரு காரியம். ஆனால் வெளிநாட்டு அரசாங்கத்துக்கு இத்தகவல்களைத் தெரிவிப்பது படுமோசமானதொரு காரியம்" என முன்னைநாள் பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக்காரியதரிசி திரு. என். கியூ. டயஸ் தொலைபேசி ஒற்றுக்கேட்டல் சம்பந்தமாக விசாரணை செய்துவரும் கமிஷன் முன்னிலையில் இன்று காலை சாட்சியமளிக்கையில் கூறினர்.

கமிஷனர் திரு. என். சிவ சிவஞானசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இந்த விசாரணைக் கமிஷனிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தொலைபேசியில் பேசப்பட்டபோது, சில அதிகாரிகள் இந்தப் பேச்சுக்களை ஒற்றுக்கேட்டுத் தெரிவித்திருந்த தகவல்களை

(8-ம் பக்கம் பார்க்க)

## சுப்ரமண்யம் பிரச்னை

புதுடில்லி. ஆக.17

உணவு மந்திரி திரு சி. சுப்ரமண்யம் பார்லிமெண்டின் உரிமைகளை மீறி விட்டதாகக் கூறி லோக்சபையிலும், ராஜ்யசபையிலும் எதிர்க்கட்சியினர் கொண்டுவந்த கண்டனப் பிரேரணைகளை இரு சபைகளும் இன்று அனுமதிக்க மறுத்துவிட்டன.

## குழாய் நீரில் செத்த பாம்புகள்!

கொழும்பு, புதன்

ஐந்துமாத காலம் பண்டாரவளைப் பகுதியில் நிலவிய கடும்வரட்சி கடந்த வாரம் முடிவடைந்ததைத் தொடர்ந்து குழாய்கள் மூலம் செத்துப்போன பாம்[illegible] பகுதி மக்களுக்குப் பெரும் சங்கடமாகவிருக்கிறது.

## பனைமரத்துடன் கார் மோதியதில் சிறுமி பலி; மூவர் கவலைக்கிடம்

### கீரிமலை-சேந்தாங்குளத்தில் துயர சம்பவம்

மாவிட்டபுரம், புதன்

கீரிமலையிலிருந்து சேந்தாங்குளம் நோக்கிச் சென்றுகொண்டிருந்தகார், கீரிமலை—சேந்தாங்குளந் சந்தியில் பனையொன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஒரு சிறுமி பலியானுள். மூவர் ஆபத்தான நிலையில் யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவம் இன்று மாலை நிகழ்ந்தது.

இருபாலையிலிருந்து கீரிமலைக்கு வந்து குளித்துவிட்டு காரில் சேந்தாங்குளம்நோக்கிச் சென்றுகொண்டிருந்தவர்களே இவ்விபத்துக்குள்ளானார்கள். இவர்கள் கொழும்பிலிருந்து விடுமுறைக்காக இங்கு வந்திருந்ததாகச்சொல்லப்படுகிறது.

கொழும்பு கொட்டாஞ்சேனை ஸ்ரீ குணாநந்த மாவத்தையைச் சேர்ந்த 11 வயதுச்சிறுமி ஹைஜின் தஞ்சித் ஜோர்ஜ் என்பவரே இவ்விபத்தில் பலியானர். இவரது தந்தையான ரத்தினம் ஜோர்ஜ், தாய் மாரியம்மா ஜோர்ஜ், கிறேஸ் ஜோர்ஜ், அகனத்விவிபரிடா ஜோர்ஜ், எட்வேர்ட் நோயல் கொலமன், சரதி முத்துரத்தினம், சந்தையா ஜெயலட்சுமி (இருபாலை) காயமடைந்துள்ளனர். இவர்களில் சொலமன், கிறேஸ், அகனத்விவிபரிடா ஆகிய மூவரும் ஆபத்தான நிலையில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சாரதி உள்ளிட்டு மூவர் ஆஸ்பத்திரியில் காயங்களுடன் உள்ளனர்.

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

— சுவாமி நடராஜானந்தா —

(ராமகிருஷ்ண மிஷன், மட்டக்களப்பு)

ஜகநாதனைப்போன்றபெரியார்கள் சிரிய இலட்சியங்களைக் கடைப்பிடித்தொழுகுபவர்கள். ''யாதும் ஊரே, யாவரும் கேளிர்'' என்னும் பழந்தமிழ்ப் பாடலுக்கேற்ப நடப்பவர். தெய்வத்தையும் தமிழையும் மறவாது போற்றுபவர். தனது சொல்லாலும், செயலாலும், பாவனையாலும் தம்மைச் சார்ந்தவர்களுக்கு இன்பம் வருவிப்பவர். அகிம்சையை ஆடையாக அணிந்து, அன்பையே ஆயுதமாக உடையவர். அவர் தமது தாய் நாடாகிய இந்தியாவில் மட்டுமன்றிச் சேய் நாடாகிய இலங்கை, பர்மா, சிங்கப்பூர் போன்ற தமிழ் மக்கள் வாழும் நாடெங்கிலுஞ் சென்று சொற்பொழிவாற்றியும், மகாநாடுகளில் கலந்தும், சமய சம்பந்தமான விழாக்களில் பங்குபற்றியும் பத்திரிகை மூலமாகவும் தமிழுக்கும் சமயத்துக்கும் பல ஆண்டுகளாக அருந்தொண்டாற்றியுள்ளார்.

கலைப் பத்திரிகையில் வாரந்தோறுங் கட்டுரைகளாக வெளிவந்த ''அறிவுக்கனலே, அருட்புனலே'' என்னும் ஸ்ரீராமகிருஷ்ண-விவேகானந்த சரிதைகளை புத்தகரூபமாக வெளியிட்டதன் மூலம் அவ்விரு பெருங்குரவரின் சமய போதனைகளையுஞ் சாதனைகளையுந் தமிழுலகெங்கும் பரவச் செய்து மங்காப் புகழை ஈட்டிக்கொண்டார். இந்நூலைப் பாரதநாட்டின் ராஷ்டிரபதி டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் அவர்கள் அண்மையில் வெளியிட்டுக் கௌரவித்ததை நாமனைவரும் அறிவோம்.

இத்தகைய பெருந்தகைக்கு ஈழநாட்டு மக்களும் விழாவெடுக்க முன்வந்திருப்பது மிகவும் பாராட்டத்தக்க காரியமாகும். இந் நன்முயற்சியில் ஈடுபட்டிருக்கும் மணிவிழாச் சபையினருக்கு இலங்கைவாழ்மக்களனைவருங் கடமைப்பாடுடையோம். இவர்களுடைய முயற்சியானது இனிதுநிறைவேறும்படி எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

திரு. ஜகநாதன் அவர்கள் இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்து, தமிழுக்கும், சமயத்துக்கும், சமுதாயத்துக்கும் அன்புப்பணிபுரிந்துஇன்புற்று வாழவேண்டுமென்று மனப்பூர்வமான ஆசிகளைக் கூறுகின்றோம்.

# கி. வா. ஜகந்நாதன்

# தமிழ் தாத்தா கண்டெடுத்த நல்முத்து

— ச. கணபதீஸ்வரக் குருக்கள் —

(ஈழத்துச் சிதம்பரம் தேவஸ்தானம், காரைநகர்)

தென்னாடுடைய சிவனே போற்றி! எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி! வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்டது தமிழ் நாடு. சைவத் தமிழ்ப் பேரறிஞர் கி. வா. ஜகந்நாதன் அவர்கள் தமிழ் நாட்டிலே பிறந்தாராயினும் அவர் இன்று தமிழ் கூறும் நல்லுலகம் முழுவதற்கும் உரியவராகத் திகழ்கின்றார். தமிழ்த் தாத்தா கண்டெடுத்த நல் முத்து. தமிழ் நாடு பெற்றெடுத்த நவரத்தினம்; ''கலைமகளை'' உருவாக்கும் கற்பகதரு. பெருஞ்சொற்கொண்டலாயும் எழுத்தின் வேந்தராயும் தமிழ் மக்களின் இதய சிம்மாசனத்திலே அரசு செலுத்தும் பேரறிஞர் கி. வா. ஜகந்நாதன் அவர்கள் தன் உருவத்தாலும் உள்ளத்தாலும் பழமைக்கும் புதுமைக்கும் பாலமாயிருக்கின்றார். தன் சொல்லாலும் எழுத்தாலும் தமிழுக்கும் சைவத்திற்கும் பாலமாயிருக்கின்றார்; தன் வரவாலும் செயலாலும் ஈழத்திற்கும் இந்தியாவுக்கும் பாலமாயிருக்கின்றார். உலகம் தழீஇய ஒட்பமுடைய இப்பேரறிஞர் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து தமிழ்ப் பணியும் சைவப் பணியும் புரியச் செந்தமிழ் முருகன் திருவருள் பாலிப்பானாக!

# ஆசிமொழி

- சிவஞான பாலய சுவாமிகள் மகாசந்நிதானம் அவர்கள் -

(மயிலம் - பொம்மபுரம் ஆதீனம்)

அறத்தின் திருவுருவமாக விளங்கித் திருவருள் நெறியை உலகமெல்லாம் பரப்பிவருகிற ஸ்ரீ கி.வா.ஜ. அவர்கள் அறுபதாண்டு நிறைவுவிழாஎய்துவதுபெருமகிழ்ச்சி தருகிறது. இல்லறத்திலிருந்தும் இறைவனை ஒரு கணமும் மறவாத தியான சீலர். சிறந்த ஒழுக்கம் உடையவர்கள். அகத்தால் தூயராக இருக்கின்ற அவர்கள் உலகியல் அறிதலும் நிலை இய தோற்றமும் உடையவர்கள்.

தமிழ் அவர்களதுபேச்சில் திருவருளில் திளைத்து வெளிவரும். தெய்வத்தை மறந்தால் தமிழ் இல்லை என்னும் அளவுக்குத்தெய்வத்தமிழை மக்களிடையே நாளும் பரப்பிவருகிறார்கள். சங்க நூல் முதல் நாடோடிப் பாடல்வரை ஆராய்ந்தவர்கள். சமய இலக்கியங்களை, சமயநுட்பங்களைத்தெள்ளத்தெளிவாக, உதாரணங்களோடு, உவமைகளோடு விளக்கி மக்களுக்கு இறைப்பற்றை வளரச்செய்துவருகிறார்கள். ஒரு திருமடமும், ஒரு பல்கலைக்கழகமும் செய்யவேண்டிய பணியை அவர்கள் தனி ஒருவராக நின்று செய்துவருகிறார்கள்.

ஓயா உழைப்பின் உருவமாக விளங்குகிற அவர்கள் ''என் கடன் பணி செய்து கிடப்பதே'' என்னும் அப்பர் பெருமான் வாக்கின் விளக்கமாக வாழ்க்கைநடத்துகிறார்கள். சிறுகதை, நாடகம், இலக்கியக் கட்டுரை, கவிதை, நூற்பதிப்பு, சொற்பொழிவு முதலிய எல்லாத் துறையையும் அறிந்துசெயலாற்றுகின்ற ஒரே ஒருவராகத் தமிழ்நாட்டில் விளங்குகின்றார்கள். எல்லையற்ற பக்தியைத் தம் குருநாதராகிய ஐயரவர்களிடத்தே வைத்து அவர்கள் தந்த ஞான பொக்கிஷங்களை விரித்து வழங்குகிறார்கள்.

எந்த நிலையிலும் கந்தப் பெருமானைத் தமது சொந்தப் பெருமானாகச் சிந்தையில் மறவாது செயலாற்றும் அவர்கள் சிவப்பிரகாச சுவாமிகள் கூறியவாறே,

''சீரணி புகழும்
கல்வியும் சிறந்த
செல்வமும் இல்லில்
வாழ்பவர்க்குப் பேரணி
கலமென் புதல் வரும்
கதியும்''

அப்பெருமானது திருவருளால் பெற்றுள்ளார்கள். அவை மேலும் சிறந்து நலம் பெற்றுப் பல்லாண்டு வாழ்ந்து தமிழுக்கும், சமயத்திற்கும் பணிசெய்யமுருகப் பெருமான் திருவருளும், [illegible] இருவருளும் நிறைவதாக!



ஜகத்குரு சங்கராச்சாரியாரிடம்
கி. வா. ஜ. ஆசி பெறல்

# மணி விழா நிகழ மாண்புடன் வாழ்க!

— பண்டிதர் வ. மு. இரத்தினேசுவர ஐயர் —

செந்தமிழ் செழித்த சுந்தரப் பாண்டியின்
அந்தமில் சங்கம்; ஆலவாய் இறையருள்
முந்திப் பொழிய முதறி வாளர்
நந்த வேளருள் கதித்துப் பாயச்
சங்கங் கண்டார், கலைகள் தழைத்தன
சங்க மி இய தற்பரற் போற்றினர்
பன்னூ லணிபெறப்பகர்ந்த திறத்தாற்
பொன்னூல் ஏட்டில் பொதுளிய கிடந்த
சாமி நாதச் சான்றோர் நோக்கிப்
பூமியிற் பொற்புயர் நகர்தொறுந்தேடியே
மிதிலைப் பட்டி மே னர் பெற்று
பெரிதும் வருந்தி பெட்புற ஆய்ந்து
அரிய திருத்தம் அமைவுற அளித்தார்;
உண்ணிறை நுண் மதி உயர்வு தன்னால்
நன்னும் நூல்களை நாமறிந் தேமால்
வழுஉப் பலவகற்றி வண்டமிழ் தந்தார்
எழுதா எழுத்தில் இன்புறக்கண்டோம்
பேராசிரியப் பெரும் பெயர் தன்னை
ஆரா அன்பின் அரசினர் சூட்டினர்
நண்ணறி பொறுமை தன்னிரு கண்ணுய்
நண்ணினோர்க்கெல்லாம் நலம்பல கூட்டினர்
தமிழக நான்காஞ் சங்கம் வைகி
இமிழ்திரை ஞாலம் அமிழ்தென அருந்தச்
செவ்விய போதனை செய்த மாண்குணம்
எவ்வித முரைப்போம் நவ்விசேர் நம்பன்
திருவடி மறவாப் பெருவடி வுடைய
குருவடி மறவாக் குன்றே யனைய
ஒருபெரும் புகழினர் ஒருவர் உளரே!

—அன்னோர்த்

2

தொண்டை நாட்டுத் தோமில் பதிகளுள்
மண்டிய செல்வ மறையவர் வாழும்
கிருட்டின ராய புரமெனக் கிளத்தும்
அருட்டிகு வளர அமைந்த பதியில்
சகத்துளோர் சிறக்கத் தண்டமிழ் தழைக்க
சகந்நாதப் பேர்மிளிர் தமிழ்ம ணி தோன்றினர்
கிவாவெனச் சுருக்கிப் பெழுமுறக் கூறுவர்
பேரவை தோறும் பெருசொ லாற்றும்
ஆரா அன்பரின் மணி விழாக் கேட்டு
பேராசை உந்தப் பேசினேன் இக்கவி
ஆலவாய்ச் சங்கத்து அடியேன் அவரை
சீலமார் ஐயர்வாள் சீடர் என்றே
அறிந்த நாண்முதல் அவர்திற னறிவேன்
தணிவில் செல்வமும் ஆயுளுந் திகழ
மணிவிழா நிகழ மாண்புடன் வாழ்க!
வென்றி வேலருள் நன்று பாலிக்க
நன்றுடன் சிறந்து நானிலம் போற்றவே

3

வேறு

மங்கலமார் தமிழகத்து மாத்திரமா? தமிழர்வாழ்
நகர்களெலாம் நற்சைவ நெறிவிளங்கப்
பங்கமிலாத் தேவாரம் மணிவார்த்தை பத்தி
கூட்டப் பாக்களிலே துறுமியசீர் வளங்காட்டித்
துங்கமிகு புலவாணர் தூயபுது விருந்தாகத்
தொல்முறையே நவிலுமன்பன் சகநாதன்
எங்கணுமே இசை பரப்பிப்பல்லாண்டு[illegible]
இனிது வாழ்க வாழ்கதமிழ் நாடுமாதோ.

# கி. வா. ஜ. வை வாழ்த்துதும் வம்மின்!

— பண்டிதர் செ. பூபாலபிள்ளை, மட்டக்களப்பு —

மணிவிழாக் காண மகிழ்வுடன் வந்த
தூயநற் புலவீர்! சொல்வன்மை யுடையீர்!!
ஆறுமுக நாவல பிரானோ டருட்திரு
விபுலா நந்த வித்தகர் பிறந்த
திருக்கே தீச்சரந் திருமலை மருவும்
ஈழ மணிநாட் டிசையுடன் வாழ்வீர்
சால்பு மிக்குடையீர் சாற்றிடக் கேண்மின்!
தண்டமிழ் நாட்டின் தனைய னாக
முத்தமிழ் நாட்டின் முதல்வ னாக
பொற்புற வுதித்த புண்ணிய சிலன்
அண்டர் குலத்துதித்த அருமறை யாளன்
அறுமுகன் அடியினை அகலா மனத்தினன்
மண்டலம் புகழும் மாண்புமிக் குடையோன்
ஐயீ ராண்டில் அற்புதப் புலமை
எய்திடப் பெற்ற இருங்கலை வாணன்
கலைமகள் விருப்புறக் கருத்தறி விப்போன்
அமிழ்தன கவிபுனை அழகுகி வாஜவை
தமிழ்ச்சுடர் விளக்கெனச் சாற்றினர் மேலோர்
கல்விக் களஞ்சியங் கவிஞர் சிகாமணி
திரிசிர புரந்தரு தெய்விக வித்துவான்
மீனாட்சிசுந்தரம் பிள்ளை விருப்புற
உத்தம தானபுரத் துதித்த மாணவர்
மங்காப் புகழுறும் மகாமகோ வுபாத்தியாயர்
தங்கத் தாத்தா தக்கண வருநிதி
இங்கித மாக எழுத்தறி புலவர்
சங்கத் தமிழ்நூல் தாம்பதிப் பித்தே
துங்க முறவே தோத்திரம் பாடிப்
பண்டிதர் குழாம்பல வரவிட நின்ற
சாமிநா தையர் தாழினை பணிந்து
பெரும்பே ராசான் பிரியம் பெற்றுத்
தலைமா ணியாகத் தகவுற விருந்தே
செந்தமிழ் பயின்ற சிறப்புடைப் புலவனைக்
குருபரம் பரைநிதங் குலவிடும் வண்ணம்
பிள்ளைமரபு பெரும்புக ழெய்த
குருவடி நினைந்து கும்பிட் டேத்திச்
சுந்தரத் தமிழிற் சொற்பெருக் காற்றியும்

(3-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா சிறப்பு இதழ்

## கி. வா. ஜ.வை

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

நந்தா நூல்பல நலனுற யாத்தும்
படிப்போ ருளங்கொளப் பாடஞ் சொல்லியும்
உயிருள முவப்ப வுரைத்துற வாடியும்
ஓ்வா துழைக்கும் உத்தமப் புலவனைச்
'சந்தனப் பொதியத் தடவரை' இருந்து
தமிழ்வளஞ் சுரப்பதி தமிழ்நாடு வாழ
வந்த-மணத் தென்றலென வாழ்த்துவன் யானே
என்னுடன் கூடி இன்தமிழ்ப் புலவீர்
உளமலர் பூத்து முகமலர் வுடனே
தமிழ்மணம் பரப்புந் தண்ணறுந் தென்றலை
யாழ்நக ரத்து நலனுறக் கூடி
வாழ்த்துதும் வம்மின் வாழ்த்துதும் வம்மின்
வழிவழி இலங்கையர் வண்மை துலங்கிட
ஈழத்து மணியால் இணையிலா முத்தால்
மாலை கோத்து மகிழ்வுறச் சூட்டி
ஈழவ ருவப்ப இ யசொற் பொழிவால்
உள்ளங் கொள்ளைகொள் உயர்தமிழ்ப் புலவனை
ஆழ அறிவுடை அருஞ்ஜக நாதனை
ஆணும் பெண்ணும் அனைவரும் கூடி
வாழ்த்துதும் வம்மின் வாழ்த்துதும் வம்மின்
பழமை புதுமைக்குப் பாலம் இட்ட
அருந்தமிழ்ப் பற்றுசிக் காசிகூறி
மனைமகா ரோடு மகிழ்வுடன் கூடிப்
பல்லாண்டு வாழ்கெனப் பரனை வேண்டி
மு யுடை மன்னன் முகமலர் வுறவே
துணிகர மான தோற்றங் காட்டும்
குடுமிப் பெருமை கூறிக்கூறி
நறுமலர் தூவி நாமெலாம்
வாழ்த்துதும் நீடு வாழிய வெனவே.

## செருக்கு அடங்கியது

(கிந்தனைச் செல்வன்)

கி. வா. ஜ. வும் கல்கியும் ஒரு நாள் விருந்தொன்றுக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். விருந்துக்கு அழைத்தவருக்கு கி. வ. ஜ. வைத் தெரியாது. விருந்து நடந்து கொண்டிருக்கும்போது விருந்துக்கழைத்தவர் சொன்னார் ''உண்மையிலேயே கல்கியின் எழுத்தும் பேச்சும் என்னைக் கவர்ந்தவைதான். ஆனால், ஜகந்நாதன் என்ற ஒரு மனுஷன் எழுதுகிறாரே அது எனக்குப் பிடிக்கவே பிடிக்காது. அவருடைய எழுத்தில் எல்லாம் தான் தான் என்ற செருமை தலை தூக்கி நிற்கிறது'' என்றாராம்.

கி. வா. ஜ. தலைகுனிந்து விட்டார். இந்நிகழ்ச்சிக்குப் பிறகுதானாம் கி. வா. ஜ. வின் செருக்கு அடங்கியது என்று கி. வா. ஜ. வேஇந்தியாவில் கூட்டமொன்றில் கூறியுள்ளார்.

## நானிலம் வாழ்த்திடும் ஜெகந்நாதன்

— வடிவேல் சுவாமி, உருத்திரபுரம் —


சீரார் திருமுறைச் செல்வச் செழுந்தமிழ் நூல்விரித்தாய்
பேரா யிரமுடைப் பெம்மான் பெரும்புகழ் பேசிநிற்பாய்
ஓரா யிரயுக முன்புக ழோங்கி யுயர்வுபெற
ஆரா வமுதின் னடியிணை யாம்தொழு தேத்துவமே.

அருண கிரியி னருள்கவிக் காக்கத்தை யாக்கிவைத்தாய்
மருளும் மனத்தவர் மாண்புற மானுட வாழ்க்கையினுள்
அருளுந் திருவு மருமிகை ஞானமுங் காக்கவல்ல
பொரு ளென்றுணர்ந்த ஜெகநாதப் பேருடைப் புங்கவனே.

நல்லரு ளாளன் நமையாளும் வள்ளலிந் நானிலத்தே
புல்லிய ரும்புனி தம்பெற்றுப் பூரண போதம்பெற
நல்லுரை யாற்றி நறுஞ்சுவை நற்றமி ழாலெழுதும்
வல்லவ உன்னை வளங்கினன் வாழ்ஜெகந் நாதவென்றே.

**வேறு**

நற்றவர் வாழ்த்திடும் ஜெகந் நாதன்
நானிலம் வாழ்த்திடும் ஜெகந் நாதன்
கற்றவர் வாழ்த்திடும் கலை ஞானம்
பெற்றவன் பெரும்புகழ் ஜெகந் நாதன்.



தர்மபுரம் மஹா சன்னிதானத்திடம் பொன்னாடை பெறுதல்

## பாரதியும் கல்கியும்

[கி. வா. ஜ. சாகித்திய தின விழாவின் போது ஆற்றிய சொற்பொழிவில் ஒரு பகுதி]

கவிதை உலகிலே நட்சத்திரம் போல எழுச்சிபெற்ற பாரதி, தான் வாழ்வதற்கு விதிக்கப்பட்ட சில வருடங்களுக்கு தனது ஒளியைப் பொழிந்தார். புதுமையை அமைத்த அவர் பழைய கருத்துக்களுக்கு புதிய வடிவங்களைக் கொடுத்தார். புதிய இலக்கிய வடிவங்களை உருவாக்கினார். தேசியப்பற்றாகிய நெருப்பினைத் தூண்டினார்; பக்தியில் புதிய வாழ்க்கையை புகுத்தினார். கற்பனையில் களிநடனம் புரிந்தார், அடிமைத் தளையிலிருந்து பெண்கள் விடுதலையடையவேண்டுமென அவர் விரும்பியபோது அனல்வெள்ளத்தைக் கக்கினார். தாழ்த்தப்பட்டவர்களினதும் அடக்கப் பட்டவர்களினதும் எழுச்சிக்காக பல கவிதைகளைப் பாடினார். கடவுளைப் போற்றிப்பாடும்போது நீண்டகாலமாக இருந்து வந்த முறைகளை நீக்கிப்புதிய முறையில் பாடிக்களித்தார். கடவுளைப் பாடிப் பரவும் போதெல்லாம் பழம்புலவர்கள் அவரை குருவாகக் கொண்டனர். ஆனால் பாரதியோ அதனுடன் நில்லாது அவரை மாணவனாக -சிஷ்யனாகக் கொண்டாடுகிறார்..

பண்டைய சமயப் புலவோர் கடவுளைக் காதலராகக் கொண்டு பல பாடல்களைப் பாடியுள்ளனர். பாரதி அவற்றைப் பின்பற்றியதுடன் நில்லாது புதுமையொன்றையும் புரிந்துள்ளார்; கடவுளைத் தனது பெண் காதலராகக் கொண்டு பாடியுள்ளார். இவ்வாறு ஆண்தெய்வமாகிய கண்ணன் ஒரு பெண் தெய்வமாகிய கண்ணம்மாவாக மாற்றப்பட்டது. ''நீ ஒரு கடவுள் ஆகவே நீ விரும்பிய எந்த வடிவத்தையாவது பெற்றுவிடமுடியும். என்னால் தான் என் வடிவை மாற்ற முடியாது. எனவே நான் இருப்பதைப் போல ஒரு ஆணாக இருக்கின்றேன். ஏன் நீ ஒருபெண்ணாக மாறலாமே'' இவ்வாறு பேசிய பாரதி தனது மீசையை முறுக்கிக்கொண்டு அழியாத நித்திய பாடல்களை கண்ணம்மா மீது பாட ஆரம்பித்தார்.

மனமுருகும்வகையில் அவரது பாடல்களிலே காதல் அமையக்கலை. இறையுடன் இணையவிரும்பும் உயிரின் ஆசையைக் கொண்ட காதலே அது. பிரபஞ்சத்தைக் கண்ணம்மாவின் உருவாகக் கொண்டார் பாரதி. அவர் அவளைக் காதலித்தார். பரந்தபிரபஞ்சத்தில் இருக்கும் எதுவானாலும் அது வேறுபாடில்லாமல் அழகானதாகவும் இனிமையானதாகவும் பாரதி எண்ணினார்.

காக்கைச் சிறகினிலே
நந்தலாலா—நின்றன்
கரியநிறந் தோன்று
தையே நந்தலாலா!
தீக்குள் விரலை வைத்தால்
நந்தலாலா—நின்னைத்
தீண்டு மின்பந் தோன்று
தடா நந்தலாலா!

என்று பாடுகின்றார் பாரதி. நாம் அவலட்சணமென்று கூறும் காக்கையைப் பார்க்கும் பாரதி அதன் சிறகினிலே கிருஷ்ணதெய்வத்தின் கரிய நிறத்தைக் காணுகின்றான். பண்டைப் புலவோர், கிருஷ்ணதெய்வத்தின் கரிய நிறத்தை கரிய கடலின் பரப்பிலும், உயர் வானத்தின் விரிவிலுமே கண்டார்கள். ஆனால் ஏழையின் புலவனாகிய பாரதி கிருஷ்ணபரமாத்மாவின் நிறத்தை காக்கையின் கரியநிறத்தில்கூட கண்டான். ஆம்! கடவுளால் படைக்கப்பட்ட கறுத்தப் பொருள்களின் உலகத்தில் காக்கையின் கரியநிறம் ஒரு இடத்தைப் பெறாவிட்டால் வெறுமையானதோர் இடத்தை அது ஏற்படுத்தி விடாதா. கிருஷ்ணபரமாத்மாவைத் தீண்டுவதைப் போல, தனது விரல்களால் நெருப்பைத் தீண்டும்போது பாரதி இன்பமடைகின்றான் அவன், நெருப்பிலே உள்ள சூட்டைப் போன்றவனென சமய நூல்கள் வெளிப்படுத்தும். இது உண்மையானதாகும். ஆனால் இதே உண்மையைப் பிறிதொரு உடைக்குள் போட்டு அழகான வெளிப்பாட்டு வர்ணனையுடன்,

தீக்குள் விரலை வைத்தால்
நந்தலாலா!—நின்னைத்
தீண்டு மின்பந் தோன்று
தடா நந்தலாலா

என்று பாடுகின்றான் பாரதி. அதை அறியும் திறன் எமக்

(5-ம் பக்கம்பார்க்க)

# 1929-ம் வருடம் நடைபெற்ற மதுரைத்தமிழ் சங்கத்தின் ஆண்டுவிழா



நிற்பவர்கள்: (இடமிருந்து வலம்) கிருஷ்ணசாமி ஐயங்கார், கி. வா. ஜெகந்நாதன், அங்கரமையா, ஆழ்வார் ஐயங்கார், ராமானுஜ ஐயங்கார், வ. மு. இரத்தினேசுவர ஐயர், சங்குப்புலவர்.
இருப்பவர்கள்: (இடமிருந்துவலம்) இராமானுஜாச்சாரியார், மகா மகோபாத்யாய உ. வே ஸ்வாமிநாதையர், எட்வர்டு நோர்மன் (ஆக்டிங் [illegible]), [illegible] நாராயண ஐய்ங்கார், மு. இராகவ ஐயங்கார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவா[illegible]

சர்வகலாசாலைகள் பிறர் உதவியை நாட வேண்டிய அவசியமில்லாமல் இருத்தல்வேண்டும். அரசாங்கம் தனக்குத் தேவையானவர்களுக்கு மட்டும் கல்வி அளித்து, மற்ற கல்வித் துறைகளனைத்தையும் தனிப்பட்டவர் பொறுப்பில் விடவேண்டும். போதனா மொழியை மாற்றி, மாகாண மொழிகளுக்கு உரிய இடமளித்தல் வேண்டும். — மகாத்மாகாந்தி.

ஈழநாடு

EELANADU National Tamil Daily. Post Box 49 JAFFNA.
Telegrams : EELANADU Jaffna. Telephone : 389

[illegible] பராபவ ஆண்டு ஆவணி 2 (18-8-66)

# இலங்கை கொப்பராவும் யாழ்ப்பாணம் புகையிலையும்

இலங்கையிலிருந்து இந்தியா கொப்பராவை இறக்குமதி செய்வதால் கேரளம் எவ்வகையிலும் பாதிக்கப்பட மாட்டாது என்று இந்திய அரசாங்கம் தெரிவித்துள்ளது. அதாவது இலங்கை கொப்பராவை இந்தியா தொடர்ந்து இறக்குமதி செய்யும். இது இலங்கைக்கு மகிழ்ச்சியளிக்கும் செய்தி. இதேசமயம் இலங்கை அரசாங்கமும் இந்திய அரசாங்கமும் ஆழ்ந்த கவனத்துக்கு எடுத்துக்கொள்ள வேண்டிய மற்றொரு முக்கிய விஷயமும் உண்டு.

இந்தியாவின் ஒரு ராஜ்யமான கேரளத்தில் இலங்கையில் போலவே தெங்குப் பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. போதிய அளவு கொப்பரா அங்கு இருப்பதாக கேரள மக்கள் தெரிவிக்கின்றனர். இலங்கையிலிருந்து கொப்பரா இறக்குமதி செய்யப்படுவதால் தங்கள் கொப்பரா செலவாகாது என அவர்கள் கருதுகிறார்கள். ஆனால் இந்தியாவின் தேவையைப் பொறுத்தவரையில் கேரளத்தில் உற்பத்தியாகும் கொப்பரா போதாதென்பதால் இலங்கையிலிருந்து கொப்பரா இறக்குமதி செய்வதால் கேரளத்தை பாதிக்காதென்று இந்திய அரசாங்கம் கூறுகிறது.

தேயிலை, ரப்பர், தெங்குப் பொருள் ஆகியவையே இலங்கையின் முக்கிய ஏற்றுமதிப் பொருள்களாகும். தூரத்திலுள்ள நாடுகளுடன் வர்த்தகம் செய்வதைவிட அண்டைய நாடுகளுடன் வர்த்தகம் செய்வது இலங்கைக்கு மட்டுமல்ல இலங்கையுடன் வர்த்தகம் செய்யும் அண்டை நாடுகளுக்கும் நன்மை பயக்கும். இலங்கைக் கொப்பராவை இந்தியா தொடர்ந்து இறக்குமதி செய்வது மகிழ்ச்சிக் குரியது. இதேசமயம் யாழ்ப்பாணம் புகையிலையைப் பற்றியும் இந்திய அரசாங்கம் சிந்தனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். இலங்கை அரசாங்கம் இதுபற்றி இந்திய அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவரவேண்டியது அவசியம்.

யாழ்ப்பாணத்திலிருந்து மலையாளம் எனப்படும் இந்தியாவின் கேரளராஜ்யத்துக் புகையிலை ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. இது இன்று நேற்றல்ல பல்லாண்டு காலம் நடந்துவந்த வர்த்தகம். ஆனால் இது படிப்படியாகக் குறைந்து 1964-ம் ஆண்டுடன் முற்றாகநிறுத்தப்பட்டுவிட்டது. அந்நிய செலாவணியை மிச்சப்படுத்தும் பொருட்டும், உள்நாட்டில் புகையிலை உற்பத்தி அதிகரித்ததென்றும் இலங்கையிலிருந்து புகையிலை இறக்குமதி செய்வதை நிறுத்துவதென தீர்மானித்ததாக இந்திய அரசாங்கம் தெரிவித்த போதிலும் அரசியல் பிரச்னைகளும் இதற்கு ஒரு காரணமாக அமைந்திருந்ததெனக் கொள்ள இடமுண்டு. யாழ்ப்பாணம் புகையிலையை இறக்குமதி செய்ய அரசாங்கம் மறுத்தபோதே யாழ்ப்பாணம்—மலையாளம் புகையிலைச்சங்கம் இலங்கை அரசாங்கத்திற்கு இதுபற்றித் தெரிவித்து ஏற்ற நடவடிக்கை எடுக்குமாறு கோரியிருந்தது.

"தனக்கு மூக்குப் போனாலும் எதிரிக்கு சகுனப் பிழை ஏற்பட்டால் போதும்" என்ற பழமொழிக்கேற்ப எதையும் வகுப்புவாதக் கண்ணோட்டத்துடன் நோக்கிவந்த முன்னைய அரசாங்கம் புகையிலை வர்த்தகம் சம்பந்தமாக அக்கறை எடுக்கத் தவறிவிட்டது. 1964-ம் ஆண்டில் 600 கண்டி புகையிலையை அனுப்பியதுடன் யாழ்ப்பாணம்—மலையாளம் புகையிலை வர்த்தகம் முடிந்துவிட்டது. இதன் பின் எடுத்த முயற்சிகள் பயனளிக்கவில்லை. யாழ்ப்பாணம் புகையிலைக்கு மலையாளத்தில் கிராக்கி அதிகம். இலங்கை அரசாங்கம் மனம் வைத்து இந்திய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தினால் நிச்சயம் யாழ்ப்பாணப் புகையிலை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்ய வழிபிறக்கும். இதனால் யாழ்ப்பாண விவசாயிகளுக்கு மட்டுமல்ல இலங்கைக்கே பயன்கிடைக்கும். தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் நமது தமிழ்ப் பிரதிநிதிகள் இவ்விஷயத்தில் அக்கறை செலுத்த வேண்டும்.

## உரும்பராய் தமிழரசு வாலிபமுன்னணி

உரும்பராய், புதன்

உரும்பராய் தமிழரசுக் கட்சிவாலிப முன்னணிக் கிளையின் கூட்டம் அண்மையில் திரு. மு. இராசரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் காங்கேசன்துறையிலிருந்து புறப்படும் கொழும்பு மெயில்ரயில் காலை 6.20க்கு இணுவில் ரயில்வே நிலையம் வந்தடைவதால், அந்நேரத்திற்கேற்ப கோப்பாய்ச்சந்தியிலிருந்து இணுவில் வரைபஸ்சேவை ஒழுங்கு செய்யுமாறு இ. போ. ச. வைக் கேட்டுக்கொள்வதென்றும். இலங்கை தமிழரசுக்கட்சியின் வாலிப முன்னணி மாநாட்டுக்கு உரும்பராயிலிருந்து 100 இளைஞர் ஊர்வலத்தில் பங்கு பற்றிச்செல்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

# தோட்டத்துக்குள் சென்றவர் திரும்பிவந்து குப்புற விழுந்தார்

## இளைஞன் தற்கொலை பற்றி தெரிவிக்கப்பட்ட விபரம்

மாவிட்டபுரம், செவ்வாய்

சாப்பாடு முடியவில்லை என்று கூறியதால் கோபித்துக் கொண்டு சென்றவர் சிறிது நேரத்தில் முற்றத்தில் விழுந்து இறந்தார்! இந்தத் தகவல் மாவிட்டபுரம் மரணவிசாரணை அதிகாரிமுன் தெரிவிக்கப்பட்டது.

உடுவிலைச் சேர்ந்த நாகலிங்கம் நாகராசா என்னும் 32 வயது இளைஞர் மரணமானது சம்பந்தமாக திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. ஏ. எஸ். தாமோதரம் பிள்ளை மரணவிசாரணை நடத்தினர். சம்பவ தினத்தன்று காலஞ்சென்றவர் பகல் 2-30 மணியளவில் தனது சகோதரியிடம் போய்ச் சாப்பாடு கேட்டதாகவும் அதற்குச் சகோதரி சாப்பாடு முடியவில்லையென்று கூறியதாகவும் உடனே காலஞ்சென்றவர் "நீ வைத்துச் சாப்பிடு எனக்கு வேண்டாம்" என்று கூறிக் கொண்டு தோட்டம் சென்றதாகவும் மரணவிசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சிறிது நேரத்தில் ஏதோ விழுந்தமாதிரிச் சத்தம் கேட்டு காலஞ்சென்றவரின் சகோதரி அன்னம்மா வெளியில் வந்துபார்த்தபோது காலஞ்சென்றவர் முகம்குப்புற முற்றத்தில் விழுந்து கிடந்தாராம். அவரின் வாயாலும் மூக்காலும் நுரைவந்ததாகவும் அவருக்கு முதலுதவி அளிக்கப்பட்டதாகவும் அதற்கிடையில் அவர் மரணமானதாகவும் கூறப்பட்டது.

விசாரணையின்பின் மரண விசாரணை அதிகாரி தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

# மத சம்பந்த குறிப்புகளில் கட்டுப்பாடு அவசியம்

## செனேட்டர்களுக்கு சபைத் தலைவரின் வேண்டுகோள்

கொழும்பு, வியாழன்

சமய ஒற்றுமையைக் குழப்பாமலும் மற்றவர்களின் மத உணர்ச்சிகளைப் பாதிக்காத வகையிலும் மதங்கள் பற்றிக் குறிப்பிடுகையில் செனேட் சபை அங்கத்தவர்கள் மிகவும் கட்டுப்பாடாக நடந்துகொள்ள வேண்டுமென்று செனேட்சபைத் தலைவர் திரு. ஏ. ரத்னாயக்கா செனேட் சபையில் நேற்று முன்தினம் கோரியிருந்தார்.

செனேட் சபையின் சென்ற கூட்டத்தில், மல்வத்த பீடத்தின் மகாநாயக்க தேரோ கூறியதாக ஒரு கூற்றையிட்டு செனேட்டர் ரெஜி பெரேரா குறிப்பிட்டது பற்றிப் பேசுகையிலேயே சபைத்தலைவர் மேற்கண்டவாறு கூறினார். இரு சபைகளின் அங்கத்தவர்களுக்கும் நிரந்தரக் கட்டளைகள் அளிக்கப்படும் பாதுகாப்பு, சமயப் பெரியார் பற்றிய குறிப்புக்களையிட்டுப் பாதுகாப்பு அளிக்கவில்லை. ஆகவே, எங்களுக்குரிய இந்த நிலையிலிருந்து, மதங்கள் பற்றிக் குறிப்பிடும் பொழுது நாம் மிகுந்த கட்டுப்பாடு அனுசரிக்க வேண்டுமென்றே எண்ணுகிறேன். இவ்வாறு சபைத் தலைவர் திரு. ஏ. ரத்நாயக்கா கூறினார்.

## விலைப்பட்டியல் தொங்கவிடாமல் விற்பனைசெய்த வழக்கு

### எதிரிக்கு ரூ. 500 அபராதம்

மாவிட்டபுரம், செவ்.

காங்கேசன்துறை விநாயகர்ஸ் ஸ்ரோர்ஸைச் சேர்ந்த க. சேனாதிராசா என்பவர் தனது கடையில் விலைப்பட்டியலும், அட்டைகளும் தொங்கவிடாமல் வியாபாரம் செய்ததாக உணவுப் பகுதி உத்தியோகத்தர்களால் குற்றஞ்சாட்டி மல்லாகம் நீதபதி திரு. டி. எஸ். நிற்சிங்கா முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கில் நீதிபதி விசாரணையின் பின் எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு இரு குற்றச்சாட்டுகளுக்கும் 500 ரூபா அபராதம் விதித்தார்.

உணவு இலாகா உத்தியோகத்தர் திரு. ரி. முத்தையா வழக்கை நடத்தினார். எதிரிக்காக திரு. [illegible] ஆஜரானார்.

(5-ம் கலத்தொடர்ச்சி)

ஜ. அவர்களை சில மாதங்களுக்கு முன் சென்னையில் சந்தித்ததைப் பற்றி முன்னர் எழுதியிருந்தேனல்லவா? சென்னைக்குப் பக்கத்திலுள்ள ஸ்ரீ கருமாரியம்மன் கோயில் கூட்ட வைபவம் பற்றிய பல புகைப் படங்களை ஓர் அன்பர் அனுப்பியிருந்தார். இதை கொழும்பில் ஓர் அன்பரிடம் பெருமையுடன்காட்டினேன். "கி. வா. ஜ. அவர்களுடன் சேர்ந்து இருப்பதே பெருமை தான்" என்றார் அந்த அன்பர். பூவோடு சேர்ந்த நாறும் மணக்கும் தானே.

"நல்லாரை காண்பதுவும் நன்றே நலமிக்க நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே நல்லார் குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு இணங்கி இருப்பதுவும் நன்று" என்பது ஆன்றோர் வாக்கு. அப்பேர்ப்பட்ட ஒரு நல்லவரைக் காணவும், அவர் சொல்வதை கேட்கவும் இப்போது ஈழ மக்களுக்கு மீண்டும் ஒரு வாய்ப்புக் கிடைத்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி, கொழும்பு, கண்டி, மட்டக்களப்பு முதலிய பல இடங்களிலும் கி. வா. ஜ. அவர்களுக்கு பாராட்டு விழா நடத்த-விசேஷ ஒழுங்குகள் செய்திருப்பதாகத் தெரிகிறது. கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பல்லவா?

கி. வா. ஜ. அவர்களை வாழ்த்தி ஈழத்திலுள்ள பல பெரியோர்கள் கூறியுள்ள ஆசியுரைகளை இன்று 'ஈழநாட்டில்' விசேஷ மலராக வெளியிட்டுள்ளோம். அவர் வாழ வாழ தமிழும் சைவமும் வாழும். அவரும் அவரது நற்றொண்டும் நீடூழி வாழ்க!

"மலர் மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார் நிலமிசை நீடு வாழ்வர்"

ஃ ஃ ஃ

ஒரு மணியை உலகுக்கோர் உறுதி தன்னை உதயத்தின் உச்சியை உருமானானைப், பருமணியைப் பாலோடஞ் சாடினானைப் பவித்திரனைப் பசுபதியைப் பவளக் குன்றைத், திருமணியைத் தித்திப்பைத் தேனதாகித் தீங் கரும் பின் இன் சுவையைத் திகழுஞ் சோதி, அருமணியை ஆவடு தண்டுறையுள்மேய அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந்தேனே.

—அப்பர் சுவாமிகள்

# ஐயாறன் எழுதுவது

'வாகீசகலாநிதி' கி. வா. ஜ. அவர்கள் தமது துணைவியாருடன் இன்று பகல் விமானமார்க்கமாக யாழ்ப்பாணம் வருகிறார். இன்று மாலை 6 மணிக்கு வைத்தீஸ்வர வித்தியாலயத்திலே யாழ்ப்பாண பொதுமக்கள் சார்பாக அவருக்கு, மணிவிழாவை ஒட்டி, வரவேற்பும் பாராட்டும். பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் தலைமை வகிக்க நீதியரசர் ஸ்ரீஸ்கந்தராஜா பொன்னாடை போர்த்துகின்றார். பல அறிஞர்கள் பாராட்டுகின்றார்கள். அவரைப் போற்றுவது தமிழையும் சைவத்தையும் போற்றுவதாகுமல்லவா?

ஃ ஃ ஃ

இரவிலே காங்கேசன் துறையிலே கப்பல் திருவிழாவில் கலந்து கொண்டு பேசுகின்றார்கள். நாளை வெள்ளிக்கிழமை உடும்பிராய் சிதம்பர சுப்பிரமணி சுவாமி ஆலயத்தில், அவர் எழுதியுள்ள "சிதம்பர சுப்பிரமணியன் புகழ்க் கதம்ப" வெளியீட்டு விழா நடைபெறுகிறது.

அழகான அந்த நூலின் பிரதியை முன்கூட்டியே காணும் பாக்கியம் கிடைத்தது. அதில் கி. வா. ஜ. முன்னுரையிலே எழுதியுள்ளதைப் பாருங்கள்.

"சென்ற டிசம்பர் மாதம் (1964) எனக்கு வெப்பு நோய் ஏற்பட்டது. மருத்துவர்கள் "டைபாய்டு" என்று கூறினர்கள். உணவுக் கட்டுப்பாடு, பேச்சுக் கட்டுப்பாடு, நடமாடுதலுக்குக் கட்டுப்பாடு யாவும் இருந்தன. ஆனால் என் மனதில் எண்ணங்கள் தோன்றுவதைக் கட்டுப்படுத்தவில்லை. அது அவர்களால் முடியாது ஏன், என்னாலும் முடியாது தானே.

"படுக்கையில் கிடந்தபடியே பல தலங்களுக்குச் சென்று வந்தேன். மனம் என்றும் இல்லாத வேகத்தில் சிறகு கட்டிப் பறந்தது. அருமையான கற்பனை ஊற்றுப்போல் எழுந்தது.

அப்போது அன்பர் திரு. தனபாலசிங்கத்தின் வேண்டுகோள் நினைவுக்கு வந்தது. "எங்கள் சிதம்பர சுப்பிரமணியனைப்பற்றி நூறு பாடல்களேனும் எழுதி அளியுங்கள்" என்று அவர் நேரில் கேட்டதோடு அடிக்கடி எழுதியும் வந்தார். அதற்கு இதுதான் வாய்ப்பான சமயம் என்று எண்ணிப் பேனாவை எடுத்தேன்.

"பேனா விரைவாக ஓடியது. நூறு இரு நூறு என்று பாடல்கள் வந்து கொண்டே இருந்தன. சில நாள் இருநூறு முன்நூறு என்றுகூடப் பாடினேன். ஒரு வாரத்தில் ஆயிரம் பாடல்கள் பாடி முடித்துவிட்டேன். அவற்றைப்படி எடுக்க மாதக் கணக்கில் ஆகிவிட்டது.

(வெப்பு நோய்ப் பட்டிருக்கையில் அவர் எப்படி உட்கார்ந்து இப்பாடல்களை எல்லாம் ஒரு வாரத்தில் எழுதினர் என்று சந்தேகம் ஏற்படுகிறதல்லவா? சாதாரணமாக அவர் புத்தகங்கள் கட்டுரைகள்முதலியவற்றை கையால் எழுதுவதில்லையாம். "டேப்ரிக்கார்டரை" பக்கத்தில் வைத்துக் கொண்டு, வாயால் சொல்லச் சொல்ல அது பதிவு செய்துவிடும். பின்னர் உதவியாளர் அதிலிருந்து 'படி' எடுத்து நூலாக்குவது வழக்கமென்றறிந்தேன். அப்படித்தான் இந்நூலும் உருவானது போலும்)

ஃ ஃ ஃ

குருவருளும் திருவருளும் பூரணமாகப் பெற்ற கி. வா. ஜ. (4-ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'அரசியல் வாழ்க்கையில் பிரதமருக்கு இப்போது மூன்று மனைவிகள்!'

## ஹர்த்தால் நினைவு தினக் கூட்டத்தில் டாக்டர் என். எம். கிண்டல்

காலி, புதன்

"சொந்த வாழ்க்கையில் பிரதமர் டட்லி சேனநாயக்கா பிரம்மச்சாரியாக இருந்தாலும், அரசியல் வாழ்க்கையில் அவர் மூன்று பெண்களைத் திருமணம் செய்து கொண்டுவிட்டார். தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு. ஜி ஜி பொன்னம்பலம், தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. எஸ் தொண்டமான் ஆகியோர்களே அவர் மணஞ்செய்து கொண்ட பெண்கள்."

ரத்ஹமவில் நடைபெற்ற ஹர்த்தால் நினைவுதினக் கூட்டத்தில் லங்கா சமசமாஜக் கட்சித் தலைவரும், எட்டியாந்தோட்டை எம் பி. யுமான டாக்டர் என். எம். பெரேரா பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

ரத்ஹமகிராமசபைத்தலைவர் திரு. பி. குணத்திலகா தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

டாக்டர் என். எம். பெரேரா மேலும் பேசுகையில் கூறியதாவது:

பிரதமர் டட்லி இந்த நாட்டைத் தவறான பாதையில் இழுத்துச் சென்று ஆட்சி நடாத்த முயலுகிறார் ஆனால் நினைப்பது போன்று நீண்டகாலத்துக்கு ஆட்சி செலுத்த முடியாது. முதலாளித்துவ அரசாங்கத்தை மாற்றியமைத்து மக்கள் அரசாங்கமாக்குவது முடியாத பெரும் கஷ்டமான ஒருசெயலாகும். இதற்கு ஒரே வழி அரசாங்கத்திலிருந்து வெளியேறிச் செல்வதே.

### பிரதமர் சாதுவல்ல

1953-ம் ஆண்டு டட்லி பிரதமராக இருந்தபோதே ஒன்பது அப்பாவி மக்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள் இப்போதும் ஜனவரி 8-ல் பௌத்த பிக்கு ஒருவர் சுடடுக் கொல்லப்பட்டார். பிரதமர் பார்ப்பதற்கு சாதுவான மனிதராக இருப்பார் ஆனால் அவர் நடந்து கொள்ளும் விதம் முற்றிலும் எதிர்மாறானதாக இருக்கிறது.

இந்தியர்கள் ஐ தே கட்சியினரை கடந்தகாலங்களில் ஆதரிக்காது வந்தார்கள். ஆனால் திடீரென்று இப்போது தொண்டமான் ஆதரிப்பதற்குக் காரணம் ஸ்ரீமா—சாஸ்திரி ஒப்பந்தத்தை அமுல்படுத்துவதில்லை யென்று பிரதமர் உறுதி கூறியிருப்பதே.

### பணக்காரர் பட்ஜட்

பட்ஜட் பணக்காரர்களுக்குச் சாதகமாகவே இருக்கிறது. ஏழை மக்களுக்கு அது எவ்விதத்திலும் நன்மையளிக்கவில்லை நாய்கள் குதிரைகள் இறக்குமதியினால் பயனடைபவர்கள் பணக்காரர்தானே.

### பிரிவினைக்கொள்கை மாறவில்லையே

கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. பீட்டர் கெனமன் பேசுகையில் தமிழரசுக்கட்சியினர் தமது பிரிவினைக் கொள்கையை இன்னும் கைவிடாதிருக்கிறார்களென்றும் அப்படியானால் எப்படி நாடு ஒற்றுமைப்படுமென்றும் கேட்டார்.

பத்தேஹம எம். பி. திரு. நீ டி. அல்விஸ். திரு. எம். ஜி. மெண்டிஸ், திரு. ஹென்றி டபிள்யு திஸநாயக்கா உட்பட வேறுபலரும் பேசினர்.

---

## மருந்துச்சரக்குக்கு விலைக்கட்டுப்பாடு?

கொழும்பு, வியாழன்

மருந்து மாத்திரைகள் பிள்ளைகளுக்கான விலைக் கட்டுப்பாட்டுத் திட்டமொன்றை அரசாங்கம் கொண்டுவரவிருக்கிறது. விலைக்கட்டுப்பாட்டை பதுக்கல் அல்லது கள்ளச்சந்தை மூலம் தவிர்க்க வியாபாரிகள் முற்பட்டால். அரசாங்கம் மருந்துச்சரக்குகளின் இறக்குமதியைத் பொறுப்பேற்கவேண்டி வருமென்று சுகாதார அமைச்சர் திரு. எம். டி. எச் ஜயவர்த்தன இங்கு தெரிவித்துள்ளதாக அறியக்கிடக்கிறது.

அரசாங்கம் விலைக்கட்டுப்பாட்டை கொண்டுவர உத்தேசித்திருப்பதைத் தொடர்ந்து பல வியாபாரிகள் தமது இருப்பிலிருக்கும் பொதுப்பழக்கத்திலுள்ள மருந்துப் பொருட்களை பதுக்கிவிட்டனரெனத்தெரிகிறது.

---

யாழ்ப்பாணம்

## தொழில்நுட்ப பாடசாலை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

உடுவில், புதன்

யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில் நுட்பப் பாடசாலையின் கழகவாண்டு 66-67க்குரிய மாணவர்களை சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் இப்பொழுது கோரப்பட்டுள்ளன. இம்மாதம் 26-ம் திகதிக்கு முன்பதாக விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப் பத்திரங்கள் இப்பொழுது கனிஷ்ட தொழில் நுட்பப் பாடசாலை அலுவலகத்தில் நேரிலோ அல்லது தபால் மூலமோ பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

---

சங்குவேலி

## பிள்ளையார் கோவில் மகோற்சவ விழா

உடுவில், புதன்

சங்குவேலி சிவஞானப் பிள்ளையார் கோவிலின் வருடாந்த மஹோற்சவ விழா இம்மாதம் 21-ம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகிறது. விழா தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெற்று 30 ம் திகதி நடைபெறும் தீர்த்தத் திருவிழாவுடன் முடிவடையும். நவாலியூர் பிரம்மஸ்ரீ சண்முகரத்தினக்குருக்கள் பிரதான குருவாக இருந்து விழாவினை நடாத்திவைப்பார். இம்முறை உற்சவ காலங்களில் விசேஷ கலை நிகழ்ச்சிகள், கதாப்பிரசங்கங்கள் நடைபெறுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

---

## புதுவருட உத்தியோகத்தர்

மல்லாவி, புதன்

வவனிக்குளம் சிவாலய திருப்பணிச்சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் சபைத்தலைவரும், பொல்லநறுவ நீர்ப்பாசனப் பொறியியலாளருமான திரு. வை. பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

புதுவருட உத்தியோகத்தர்கள் வருமாறு;

தலைவர்: திரு. வை. பாலசுப்பிரமணியம், உபதலைவர்கள்: திரு. வி. எஸ். வேலுப்பிள்ளை, திரு. க. சோமசுந்தரம், இணைச்செயலாளர்கள்: திரு. மு. ஆறுமுகன், திரு. சி. குமாரசாமி, தனாதிகாரி: திரு. வி. வேலுப்பிள்ளை

ஆட்சிமன்ற உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

---

## இந்திய வாழைப்பழத்துக்கு ஜப்பானில் கிராக்கி

புதுடில்லி ஆக. 17

ஜப்பானில் இந்திய வாழைப் பழங்களுக்கு இப்போது அதிக கிராக்கி ஏற்பட்டிருக்கின்றது.

இந்திய வாழைப்பழங்களை இந்தியாவுக்கு ஏராளமாக ஏற்றுமதிசெய்வதுபற்றி இந்திய அரசாங்கத்துடன் கலந்து ஆலோசிப்பதற்கு ஜப்பானிய குழுவொன்று விரைவில் இந்தியா வரவிருக்கின்றது. தற்பொழுது ஜப்பான் வேறு நாடுகளில் இருந்து சுமார் 8 கோடி டாலர் மதிப்புள்ள வாழைப்பழங்களை இறக்குமதி செய்துவருகின்றது. இப்பொழுது இறக்குமதி செய்யப்படும் வாழைப் பழங்கள் தரத்தி[illegible]தவை என்று ஜப்பான் கருதுவதாக அறியப்படுகிறது.

---

## திருக்கேதீச்சரத்தில் ஆவணி மூல விழா

திருக்கேதீச்சரம், புதன்

எதிர்வரும் 25-ம் திகதி வியாழக்கிழமை திருக்கேதீஸ்வர ஆலயத்தில் ஆவணி மூலவிழா சிறப்பான முறையில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது. அன்றுகாலை கௌரி அம்பாள் சமேத கேதீச்சர நாதருக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெறும்.

அன்றைய இரவு நிகழ்ச்சியில் இலங்கைவானொலி புகழ் திரு. பி. எஸ். பிச்சையப்பா பிள்ளையின் நாதஸ்வரக் கச்சேரியும், திருப்பூங்குடி [illegible] பாட்டும் விசேஷமாக இடம் பெறும்.

---

## பாரதியும். . . .

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இல்லை. ஒருமுறை அதை விளங்கிக்கொண்டால் ஆனந்தித்து அதை வளர்த்துக் கொள்ள ஆரம்பிப்போம். அதை எம்மால் உணரவும் ஆனந்திக்கவும் முடியும். ஆனால் விளக்கமளிக்க முடியாது. அவ்வளவுக்கு நுண்ணியது. பாரதியின் அடிச்சுவட்டைப் பின்பற்றும் பல இளைஞர்கள் இருக்கிறார்கள்.

### கல்கியின் தமிழ்ப் பணி

கல்கியின் பணியைக் கூறாது விடுவேனாகில், தற்கால தமிழ் எழுத்து வளர்ச்சியைப்பற்றி நான் பேசுவது பூரணத்துவம் பெற்றுவிடமுடியாது. தமிழிலே எதனைப்பற்றியும் தெளிவாகவும் அழகாகவும் கூற முடியும் என்பதை அவர் எடுத்துக்காட்டினார். நாவல் சிறுகதை, கட்டுரை, அல்லது எதைப்பற்றியும் அவர் எழுதினாலும் வாசகர்களின் மனதைக் கவரும்படி எழுதினார். நீண்ட தொடர் கதைகளை அவர் தொடர்பாக எழுதியபோது நாவலின் தொடர்ச்சியை வாசிப்பதற்காக வாசகர்கள் வார இதழின் தமது பிரதிக்காக ஆவலோடு எதிர்பார்த்திருந்தனர். கதையின் நீட்டத்தினால் அவர்கள் களைப்படையவில்லை. உண்மையில் நீண்டுசெல்வதையே அவர்கள் விரும்பினர். அவ்வளவிற்கு அவரது மொழிஆட்சி இருந்தது. தற்காலத் தமிழ் உரைநடை வரலாற்றில் முக்கியமான இடம் அவருக்குண்டு.

---

மண்கும்பான்

# கொலை முயற்சி வழக்கில் 1-ம் எதிரிக்கு 10 வருட கடூழியம்!

## 2-ம் எதிரிக்கு விடுதலை

யாழ்ப்பாணம், வியா.

மண்கும்பான் கொலை முயற்சி வழக்கில் முதலாம் எதிரிக்கு நீதியரசர் பத்து வருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார். இரண்டாம் எதிரி விடுதலை செய்யப்பட்டார்.

வடபகுதி அசைஸ் நீதி மன்றத்தில் நீதியரசர் திரு. எஸ். ஸ்ரீஸ்கந்தராசா முன்னிலையில் நடைபெற்ற இவ்வழக்கு விசாரணை முடிவில் ஜூரிசபையினர் நேற்று முதலாம் எதிரி குற்றவாளியெனவும், இரண்டாம் எதிரி சுற்றவாளியெனவும் ஏகமனதாகத் தெரிவித்தனர்.

இவ்வழக்கில் மண்கும்பானைச் சேர்ந்த சின்னத்தம்பி ஆறுமுகம், செல்லையா செல்வரத்தினம் ஆகிய இருவரும் அதே ஊரைச்சேர்ந்த நாகநாதி கந்தையா என்பவரை 1964-ம் ஆண்டு டிசம்பர் 4-ம் தேதி கொலை செய்ய முயற்சி செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் அரசாங்கத்தினரால் அட்வக்கேட் ஆர். ஆர். தங்கராசா ஆஜரானார்.

இரவில் துப்பாக்கியால் சுடுவது பாரதூரமான குற்றமென்று நீதியரசர் திரு. ஸ்ரீஸ்கந்தராசா தமது தீர்ப்பின்போது கூறினார்.

---

## 'பெண் பெயரை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜூசா மற்றொரு இடத்தில் மறுத்திருக்கிறாரென்றும் திரு. சில்வா தெரிவித்தார்.

மற்றொரு எதிரியின் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு. ஸ்டான்லி திலகரத்னவும் அந்தப் பெண்ணின் பெயரை வெளியிடுவது அவசியமென்றும் சில புகைப் படங்களுட்பட தஸ்தாவேஜுகள் சில தங்களிடம் இருப்பதாகவும் அவர் சொன்னார். அந்தப் பெண்ணின் பெயரை வெளியிடுமாறு சாட்சியைக் கட்டாயப்படுத்த வேண்டுமென திரு. திலகரத்தின கேட்டுக் கொண்டார்.

முடிக்குரிய தரப்பு வழக்கறிஞர் திரு. வி. எஸ். ஏ. புள்ளநாயகம் பேசுகையில் சாட்சி சந்திரசோமாவின் சாட்சியத்தை நிரூபிப்பது தான் இப்பொழுதுள்ள பிரச்னையல்லவென்றும் திரு. சமரசிங்காவுக்கு விஷயத்தைத் தெரிவித்தபின்னரே விசாரணை ஆரம்பிக்கப்பட்டதால் முடிக்குரிய தரப்பு விசாரணைகளுக்கு ஆதாரம் காட்டவே இந்தச்சாட்சியம் அளிக்கப்பட்டதென்றும் அந்தப் பெண்ணின் பெயரை வெளியிட வேண்டியது அவசியமில்லையென்றும் கூறினார். அந்தப் பெண்ணின் பெயரை வெளியிடவேண்டிய அவசியமில்லையென்பதற்கு ஆதாரமாக இங்கிலாந்தின் டெனிங் பிரபு தெரிவித்த கருத்தை திரு. புள்ளநாயகம் எடுத்துக்காட்டினார்.

கேள்விகளுக்கு பதிலளிக்கும்படி சாட்சியை வற்புறுத்துவதற்கு இந்த நீதிமன்றத்துக்கு அதிகாரமில்லை யென அவர்கூறினார்.

சாட்சி சந்திரசோமாவை அந்தப் பெண்ணின் பெயரைவெளியிட வேண்டுமென வற்புறுத்த முடியாதெனக் கூறி மாஜிஸ்டிரேட் அதை நிராகரித்து விட்டார்.

---

## கணேசபுரம். . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ராசா, கருப்பையா ஆகியோர் ராஜன் ஜேக்கப்பை கொலைசெய்ததாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் அட்வகேட் கே. வி. எஸ். சண்முகநாதன், புறக்டர் தளையசிங்கம் யோகநாதனின் அனுசரணையுடன் ஆஜரானார். எதிரிக்காக அரசாங்கத்தால் புறக்டர் ஏ அந்தனி நியமிக்கப்பட்டிருந்தார்.

தம்பையா சாட்சியமளிக்கையில் கூறியதாவது: சம்பவம் நடந்த தினம் எனக்கு ஞாபகமிருக்கிறது. அன்று நான் வீட்டில் இருந்தேன். அமிர்தநாதன் காணிக்குள் எனது மாடுகளைப் பார்க்கப் போனேன். 'யாக்கொப் நில்லடா' என்ற சத்தம் கேட்டது. அந்தக்குரல் 1-ம் எதிரியினுடையதென அடையாளம் கண்டு கொண்டேன். அமிர்தநாதன் படலையில் யாரோ ஓடினார், சத்தம் கேட்டதும் டோர்ச் லைட் அடித்துப் பார்த்தேன். யாக்கொப் ஓடிவந்தார். 1-ம், 2-ம் எதிரிகள் சயிக்கிளில் வந்ததைப் பார்த்தேன். 1ம் எதிரி கத்திவைத்திருந்தார். 2-ம் எதிரி பொல்லு வைத்திருந்தார். 1-ம் எதிரி சயிக்கிள் ஓடினார். 2-ம் எதிரி கருப்பையா சயிக்கிளிலிருந்து இறங்கி பொல்லால், ஜாக்கொப்பின் தலையில் அடித்தார். யாக்கொப் நிலத்தில் இருந்துவிட்டார். 1-ம் எதிரி தியாகராசா, கத்தியால் ஓங்கி இடதுபுற நாரியில் குத்தினார். நான் பயத்தினால் ஓடிவிட்டேன். எதிரிகள் வந்த வழியால் சென்றுவிட்டனர்.

---

## கம்யூனிஸ்ட்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கின்றது என்று ஜனாதிபதி சுகர்ணோ கூறினார். வியட்னாமிலிருந்து அமெரிக்கா வெளியேற வேண்டுமென்று கூறிய அவர் அமெரிக்கா 1954-ம் ஆண்டு கைச்சாத்தான ஜெனிவா ஒப்பந்தப்படி நடக்க வேண்டும் என்றார்.

மலேசியாவுக்கும் இந்தோனேஷியாவுக்கு மிடையில் அண்மையில் கைச்சாத்தான உடன்படிக்கைபற்றி அவர் குறிப்பிடுகையில் இது பாங்கொக் உடன்படிக்கைகளின் சீர்திருத்தப்பட்ட அம்சங்களைக் கொண்டது என்றார்.

---

## பிராமண சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், வியா.

அகில பிராமண குரு சமூக சேவா சங்கத்தின் விசேஷ மகாசபைக் கூட்டம் இன்று மாலை 2 மணிக்கு சங்கத் தலைமைக் காரியாலயமான 'காயத்திரி பீடம்' மண்டபத்தில் நடைபெறும். பல்வேறு பிரச்னைகள் குறித்து கூட்டத்தில் ஆராயப்படும்.

---

## பரீட்சை உபசபைக் கூட்டம்

வல்வெட்டித்துறை, செவ்.

வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தின் பரீட்சை உபசபைக் கூட்டம் திரு. கே. தம்பையா தலைமையில் நடைபெற்றது. வழமைபோல் இவ்வருடமும் கார்த்திகை மாதத்தில் ஐந்தாம் வகுப்புப் பரீட்சையை கல்விப் பகுதியாரின் பாடத்திட்டத்துக்கமைவாக நடாத்துவதென்றும் விண்ணப்பப் பத்திரங்களை அடுத்ததவணை ஆரம்பத்தில் பாடசாலைகளுக்கு அனுப்புவதென்றும் தீர்மானித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரொடீஷிய பயமுறுத்தலுக்கு எதிராக பாதுகாப்பு அளிப்போம்

## ஸாம்பியாவுக்கு இந்தியாவின் உறுதிமொழி

புதுடில்லி, ஆக. 17

**ரொடீஷிய சட்டவிரோத ஸ்மித் ஆட்சியின் பயமுறுத்தலுக்கு எதிராகப் பாரதம் தன் முழு ஆதரவையும் ஸாம்பியாவுக்கு வழங்கும்என்று நேற்று புதுடில்லியில் நடைபெற்ற ஒருவைபவத்தில் இந்திய உபஜனாதிபதி சாகிர் ஹூசேன் கூறினர்.**

பாரதத்துக்கு விஜயம் செய்துள்ள சாம்பியா உதவி அதிபர் திரு. கமாங்கா, வெளிநாட்டு மந்திரி திரு. கபார்க்வே ஆகியவர்களுக்கு வரவேற்பு அளிப்பதற்காக நடைபெற்ற ஒரு வைபவத்தில் பேசுகையிலேயே உபஜனாதிபதி திரு. சாகிர் ஹூசேன் மேற்கண்டவாறு கூறினார்.

பாரதம் ஸாம்பியாவின் கஷ்டங்களை நன்கு உணர்ந்திருக்கின்றது. அதன் கஷ்டங்களைப் போக்குவதற்கு தன்னால் ஆன உதவிகளைச் செய்ய இந்தியா எப்போதும் உறுதி கொண்டிருக்கின்றது. சட்டவிரோதமான ரொடீஷிய ஆட்சியினருக்கு எதிராக ஸாம்பியாவின் பாதுகாப்புக்கு ஆதரவளிக்க இந்தியா எப்போதும் தயாராக இருக்கின்றது என்று உபஜனாதிபதி கூறினர்.

ரொடீஷியா சம்பந்தமாக இந்தியா எப்போதுமே ஒரு தெளிவான கொள்கையைக் கடைப்பிடித்து வருகின்றது என்று கூறிய திரு. சாகிர் ஹூசேன், ஆபிரிக்க நாடுகளிலும் இருந்து வரும் இன ஒதுக்கல் கொள்கைபற்றியும் குறிப்பிட்டார்.

இந்த நாடுகளில் கறுப்பு இனத்தவர் ஒதுக்கி வைக்கப்பட்டு வருவது கண்ணியமற்ற, இரக்கமில்லாத பயங்கர செய்கையாகும் என்று அவர் கூறினர்.

கமாங்கா பேசும்போது காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில் ரொடீஷியாவில் ஸ்மித் குழுவினரின் ஆட்சிக்கு ஒரு முடிவு ஏற்படுத்த முயற்சி எடுக்கும்படி பாரதத்தைக் கேட்டுக்கொண்டார். ரொடீஷியாவுக்கு எதிராக எடுக்கப்பட்ட பொருளாதார நிர்ப்பந்த நடவடிக்கைகள் பயனளிக்கவில்லையென்றும் அவர் கூறினர்.

சாம்பிய வெளிநாட்டு மந்திரி திரு. கபார்க்வே பேசும்போது இந்தியா தன்னை காலனி ஆட்சியிலிருந்து விடுவித்துக் கொண்டது மட்டுமின்றி பல நாடுகள் காலனி ஆட்சியிலிருந்து விடுதலை பெறுவதற்கும் உதவியிருக்கின்றது என்றூர்.

இந்த வைபவத்தில் பல எம். பி.க்களும் பிரமுகர்களும்கூட கலந்து கொண்டனர்.

## தென்கிழக்காசியா விமானசேவை

பாக்கொக், ஆக. 17

தென் கிழக்கு ஆசியாவின் விமானத் தொடர்புகள், விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டுச் சேவைகள் ஆகியவற்றின் முன்னேற்றத்தைப் பரிசிலனை செய்ய இங்குள்ள சர்வதேச விமான சேவை தாபனத்தின் கிளைக் காரியாலயத்தில் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை மற்றும் 15 நாடுகளிலிருந்து விமானசேவை நிபுணர்கள் சந்தித்துப் பேசினர்.

(பி. டி. ஐ)

## ருமேனியாவில் விமான விபத்து

வியென்னு, ஆக. 17

ஐந்து நாட்களுக்கு முன் ஏற்பட்ட விபத்தொன்றில் ருமேனிய இலுஷின் 14 விமானத்தில் பிரயாணஞ்செய்த 24 பேர் கொல்லப்பட்டதாக வியன்னு சுதந்திர தினசரிப் பத்திரிகையான குரியர் கூறியுள்ளது.

(பி. டி. ஐ.)

## மலைஏறியவர்களை மின்னல் தாக்கியது

பிரான்ஸ், ஆக. 17

பிரெஞ்சு ஆல்ப்ஸ் மலைகளில் 10,427 அடி உயரமான மலையொன்றில் ஏறிக்கொண்டிருந்த மூன்று மலை ஏறிகள் மின்னல் தாக்கியதன் விளைவாக மாண்டனர். இவர்கள் மாணவர்களாவர்.

(பி. டி. ஐ.)

## இந்தோ - மலே கூட்டுக்கமிஷன்

கோலாலம்பூர், ஆக.17

இந்தோனேஷியாவும் மலேசியாவும் தமக்குள் பாதுகாப்பு கூட்டுக்கமிஷன் ஒன்றை அமைக்க முடிவு செய்திருக்கின்றன. இந்தத் தகவலை மலேஸிய உதவிப் பிரதம மந்திரி திரு. துன் அப்துல்ரஸாக் வெளியிட்டு இருக்கின்றூர்.

இந்தோனேஷியாவும் மலேசியாவும் தமக்கிடையில் இருந்துவந்த தகராறுகளைத் தீர்த்துக்கொள்ளும் உடன்படிக்கையொன்றை செய்துகொண்டிருப்பது குறித்து தெற்கு வியட்னும் இருநாடுகளையும் பாராட்டியிருக்கின்றது.

## மீண்டும் உபவேந்தராளுர்

சென்னை, ஆக. 14

டாக்டர் ஏ. லக்ஷ்மணஸ்வாமி முதலியார் சென்னை பல்கலைக் கழகத்தில் உபவேந்தராக இம்மாதம் 20ம் திகதியிலிருந்து மேலும் மூன்று வருடங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ளார். இத்துடன் அவர் ஒன்பதாவது முறையாக அப்பதவியை வகிக்கிறூர்.

79 வயதான டாக்டர் முதலியார் வைத்தியசேவையிலிருந்து 1942-ம் வருடம் ஓய்வெடுத்த காலம் முதல் இப்பதவியில் இருந்து வருகிறூர்.

# சந்திரனின் உருவம் உருண்டைதானு?

## விண்வெளிக்கப்பல் தெளிவுபடுத்தும்

வாஷிங்டன், ஆக. 17

வானவெளிக்கு அமெரிக்கா கடைசியாக அனுப்பியுள்ள விண்வெளி கப்பல் தற்பொழுது மிகமுக்கிய தகவல்கள் அடங்கிய படங்களை பூமிக்கு அனுப்பத் தொடங்கியிருக்கின்றது.

சந்திரனில் எதிர்காலத்தில் மனிதன் சென்று இறங்கக்கூடிய பொருத்தமான இடங்களைக் கண்டுபிடிக்க இந்தப் படங்கள் பெரிதும் உதவும் என்று கருதப்படுகின்றது. எல்லாவற்றுக்கும் மேலாக சந்திரன் உருண்டையானதுதானு என்பதையும் இந்தப்படங்கள் தெளிவுபடுத்தும் என்றும் கருதப்படுகின்றது.

பூமியில் முழு உருவத்தையும் கூட இந்தக் கப்பல் படம்பிடித்து அனுப்பும். பூமியின் உருவம் இந்தோனேஷியா பகுதியில் சற்று நீண்டிருப்பதாக ஏற்கனவே அனுப்பப்பட்ட வான்வெளிக்கப்பல் படங்களின் மூலம் வெளிவந்துள்ளது. இப்போது கிடைக்கும் படங்களின் மூலம் பூமியின் வடிவத்தைப் பற்றிய புது கருத்து ஒன்று உருவாகக் கூடும் என்று கருதப்படுகின்றது.

# ஐ. நா. வில் மேலும் சிலகாலம் பதவியிலிருக்க கோரிக்கை

## ஊதாண்டுக்கு ஜனதிபதி ஜோன்சன் கடிதம்

வாஷிங்டன், ஆக. 17

ஐ.நாவில் தொடர்ந்து இன்னும் சில காலம் பொதுக்காரியதரிசி பதவியில் இருக்கும்படி அமெரிக்க ஜனதிபதி திரு. ஜோன்சன் யுதாண்டை கேட்டிருக்கின்றூர்.

திரு. யுதாண்டின் பதவிகாலம் இவ்வருடம் நவம்பர் மாதத்தில் முடிவுறவிருக்கின்றது.

ஜனதிபதி ஜோன்ஸன் ஊதாண்டுக்கு தொடர்ந்து சிலகாலம் பதவியில் இருக்கும்படி எழுதியுள்ள கடிதத்திற்கு திரு. யுதாண்டிடம் இருந்து இன்னும் பதில் கிடைக்கவில்லை.

## அவசர நிலைமையை அகற்ற கோரிக்கை

ராவல்பிண்டி, ஆக. 17

பாகிஸ்தானில் அவசரகால நிலைமையை அகற்றும்படியும், காவலில் உள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்யும் படியும் பாகிஸ்தானில் முக்கிய எதிர்க்கட்சியான கவுன்சில் முஸ்லிம் லீக் வற்புறுத்தியிருக்கின்றது.

## மீண்டும் பூமி அதிர்ச்சி

புதுடில்லி. ஆக. 15

நேற்றுக் காலை இந்தியாவில் ஏற்பட்ட பூமியதிர்ச்சியினுல் முஸபராபாத்தில் பத்துக்கும் அதிகமான வீடுகள் இடிந்து விழுந்தன. இதில் 30 பேர் காயமடைந்தனர். 300 வருட கட்டடமொன்றும் இடிந்து விழுந்தது. இங்கு 25 கட்டடங்களின் மேல்தளங்கள் சேதமடைந்தன.

டில்லியில் மூன்றுமாடிக் கட்டடமொன்று இடிந்து விழுந்ததில் 16 பேர் பலியானூர்கள். மூன்றுமாடிக்கட்டடத்தில் 14 குடும்பங்களை சேர்ந்த 100 பேர் வசித்து வந்தனர். இதுதவிர டில்லியில் இரண்டு வீடுகள் இடிந்துவிழுந்தன. இதுபற்றி விசாரணைநடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

## ஸ்ரீ நகரில் 'கிடுகிடு' சப்தம்

புதுடில்லி, ஆக. 17

காஷ்மீர் பிரதேசத்தில் இலேசான பூமி அதிர்ச்சி ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீ நகரில் இந்தப் பூமி அதிர்ச்சி ஏற்பட்ட சில விநாடிகளின் பின் கிடுகிடு வென்ற முழக்கம் கேட்டுக் கொண்டிருந்தது. ஆனுல் சேதங்கள் பற்றிய எந்தத் தகவல்களும் கிடைக்கவில்லை.

## அமெரிக்கா கவலை

நியூயோர்க், ஆக. 17

தென் வியட்னும் எல்லையோரமாக நிகழ்ந்த அசம்பாவிதங்கள் குறித்து அமெரிக்கா கம்போடியாவுக்கு கவலை தெரிவித்திருக்கின்றது.




லக்ஷபான பாட்டரிகள்

இறக்குமதியாகும் எந்த பாட்டரியையும் விட குறைந்த செலவில் கூடிய சேவை தருகின்றன.

ஏனெனில்:

- அவை, பூரண சக்தியுடனை தொழிற்சாலையிலிருந்து புதுமை குலையாமல் உங்களை வந்தடைகின்றன. இறக்குமதிபாட்டரிகள் போல சேமிப்பில் இருப்பதால் அவை சக்தி இழப்பதில்லை
- லக்ஷபானபாட்டரிகள், சர்வதேச மின் நுணுக்க கமிஷன்விதிக்கும் தரங்களுக்கு நிகரான . அதி உன்னத சிறப்பு வாய்ந்தவை என்று பரீட்சித்து நிருபிக்கப் பட்டவை.
- லக்ஷபான பாட்டரிகள் இறக்குமதியாகும் எந்த ரகங்களையும் விட விலை மலிவானவை.

எவ். பன்ட் லைட் கார்ப்பரேஷன் லிமிட்டெட்

### பூட்டோவின் கூமுறல்

## பாக். எதிர்ப்புக் கொள்கை நீடிக்க வேண்டுமாம்

லண்டன், ஆக. 14

இந்தியாவுடன் பாகிஸ்தான் எதிர்ப்புக் கொள்கை நீடிக்க வேண்டுமென்று பாகிஸ்தான்முன்னுள் வெளிநாட்டு மந்திரி ஜுனப் பூட்டோ நேற்றிரவு இங்கு நடந்த கூட்டமொன்றில் தமது வழக்கமான நச்சு வார்த்தைகளில் குமுறினுர்.

தற்போதைய நிலைமையை விளக்கியபோது அவர் சொன்னூர். 'திருடன் வீட்டுக்குள் நுழைந்தால் என்ன செய்கிறோம்? உடனே விளக்குகளை போடுகிறோம்.'

இங்குள்ள பாகிஸ்தான் ஸ்தானிகராலயத்தால் அங்கீகரிக்கப்பட்ட பாகிஸ்தான் மாணவர் சங்கம் இக் கூட்டத்தை நடத்தியது.

'இந்தியா ஒரு பெரிய கள்ளன்; அரபு உலகத்துக்கு இஸ்ரவேல் எப்படியோ அதுபோல இந்தியாவும் ஆசியாவின் இருதயத்தில் வளரும் ஒருவிரணம்' என்று அவர் கூறியபோது மாணவர்கள் கோஷமிட்டு ஆரவாரித்தனர்.

காஷ்மீர் விஷயத்தில் பொறுமையாயிருக்க வேண்டுமென்ற உபதேசங்களை நிராகரித்து, வியட்நாமியர் அமெரிக்கரோடு சமாதானம் செய்யவேண்டுமென்ற யோசனைகளை நிராகரித்துவிட்டு வியட்நாமை விட்டு வெளியேறும்படி கட்பதை உதாரணமாகக் கூறினுர்.

சாம்ராஜ்ய நாடுகளில்ஒன்றுக் கொன்று உள்ள பிளவுகளை மூடி மறைத்து வைப்பதற்காகவே சாம்ராஜ்யம் உபயோகிக்கப் படுகிறது. ஆகையினுல் தான் நாம் அதை எதிர்ப்பதாகவும் ஜுனப் பூட்டோ சொன்னூர்.

இந்தியாவினுல் பாகிஸ்தானுக்கு அணுகுண்டு ஆபத்து இருப்பதையும் அவர் குறிப்பிட்டார்.

தமது வருங்காலத்தைப் பற்றி கேட்கப்பட்டபோது 'அது கடவுள் கையிலும் உங்கள் கையிலும் தங்கியிருக்கிறது' என்று அவர் சொன்னுர்.

# பேய் மழைக்கு மேலும் 6 சிறுமிகள் பலி

## தெ. ஜப்பானில் பயங்கர நிலைமை

டோக்கியோ, ஆக. 17

கடந்தவார இறுதியில் ஜப்பானில் தெற்கு பிரதேசத்தில் வீசிய கடும்புயல் மழைக்கு பாடசாலை மாணவர்கள் 6 பேர் கடைசியாகப் பலியாகியுள்ளனர். புயலுடன் கூடிய மழை இப்பிரதேசத்தில் பெரும் சேதங்களை ஏற்படுத்தியுள்ளது. மலை அருவியொன்றில் அந்தப் பாடசாலை மாணவர்கள் நீந்திவிளையாடிக் கொண்டிருந்தபோது அருவியில் திடீர் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு அவர்களை அள்ளிச் சென்றதாக அறிவிக்கப்பட்டது.

இதுவரை இந்தப் புயல் மழைக்கு 30 பேர் பலியாகியுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஏராள மாணவர்கள் காயமடைந்துள்ளனர். 55 இடங்களில் மண்சரிவு ஏற்பட்டு 29 பாலங்கள் சேதமடைந்திருக்கின்றது. 35 ரயில்பாதைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### போக்கு வரத்து அறிவித்தல்

**நல்லூர் கந்தசுவாமிகோயில் மஹோற்சவம் – 196?**

மேற்படி உற்சவம் சம்பந்தமாக பின் காணப்படும் தெருக்கள் 20-8-66 நள்ளிரவு முதல் 15-9-66 வரை (இரு தினங்களும் உட்பட) சகலவிதமான போக்குவரத்துகளுக்கும் மூடப்படும்.

(1) அரசடிசந்திக்கும் 2-ம் கட்டையடிக்கும் இடையிலுள்ள பருத்தித்துறைரோட்டின் பகுதி.

(2) பண்டாரக்குளம் ஒழுங்கைக்கும் சோமசுந்தரம் ஒழுங்கைக்கும் இடையிலுள்ள கோயில் தெருவின் பகுதி.

(3) பருத்தித்துறை ரோட்டுக்கும் செட்டி ஒழுங்கைக்கும் இடையிலுள்ள செட்டித்தெருவின் பகுதி.

குறிப்பு:- இவ்விடங்களில் வசிப்பவர்களுக்கும் உத்தியோக நிமித்தம் இவ்விடங்களுக்கு வரும் உத்தியோகத்தர்களுக்கும் 20-8-66 மாலை தொடக்கம் நல்லூர் கந்தசுவாமி கோயிலில் இருக்கும் தற்காலிக பொலிஸ்நிலையத்தில் விசேஷ போக்குவரத்து அனுமதிச்சீட்டுகள் வழங்கப்படும்.

**போக்கு வரத்து திசைமாற்றம்**

சாரதிகள் எல்லோரும் தயவு செய்து பின்வரும் போக்குவரத்து திசைமாற்றங்களை உபயோகிக்கவும்:-

(1) யாழ்ப்பாணத்திலிருந்து கோப்பாய்க்கு போகும்போதும் வரும்போதும் நாவலர் வீதி-நல்லூர் குறுக்குத் தெரு மாற்றம்.

(2) அரசடித்தெரு வழியாக கோப்பாய்க்குப் போகும்போதும் வரும்போதும் வைமன்ரோட்-நாவலர் வீதி-நல்லூர் குறுக்குத் தெரு மாற்றம்.

**வண்டிகள் நிறுத்தும் இடங்கள்**

யாத்திரீகர்களின் வசதிக்காக பின்வரும் இடங்களில் மூன்று வண்டி நிறுத்தும் இடங்கள் அமைக்கப்படும். சாரதிகள் இவற்றை உபயோகிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(1) அரசடித்தெரு வழியாக கந்தசுவாமி கோயிலுக்கு வரும் வண்டிகளுக்கு அம்மன் கோயில் வளவில்,

(2) தெற்கிலிருந்துவண்டிகளுக்கு கைலாசபிள்ளையார் கோயில் வளவில்.

(3) கோப்பாயிலிருந்து வண்டிகளுக்கு முத்திரைச்

## விசேஷ போக்குவரத்து வசதிகள் செய்யப்படும்

### மாவிட்டபுரம் கப்பல் திருவிழா ஏற்பாடுகள்

மாவிட்டபுரம், வியாழன்

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவிலின்சரித்திரப் பிரசித்திபெற்ற கப்பல் திருவிழா இன்றிரவு காங்கேசன் துறைக்கடலில் நடைபெறவிருக்கிறது. இவ்விழாவில் வித்துவான் கி. வா. ஜகந்நாதன் மாவிட்டபுரம் ஆதீன கர்த்தா பிரம்மஸ்ரீ சு. துரைசாமிக்குருக்களால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவார். இக்கப்பல் திருவிழா நிகழ்ச்சிகளை இலங்கை வானொலி ஒலிப்பதிவு செய்து பின்னர் ஒலிபரப்பும் என்று தெரிகின்றது.

கடந்த ஆண்டு முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்ட இத்திருவிழாவைக் கண்டுகளிக்கத்திரளவிருக்கும் ஆயிரக்கணக்கானமக்களின் வசதிக்காக போக்குவரத்து ஏற்பாடுகளைச் செய்ய இ. போ. ச. முன்வந்துள்ளது. திருவிழா முடிந்ததும் மாவிட்டபுரத்திலிருந்து பல பகுதிகளுக்கும் பஸ் சேவைநடத்த ஏற்பாடாகியுள்ளது.

இன்று மாலை மாவிட்டபுர முருகன் காங்கேசன் துறைக்கு எழுந்தருளுவார். மாலை 5-30 மணிக்கு கசாத்துறை ஆனந்தப் பிள்ளையார் கோவிலில் விசேஷ அபிஷேக ஆராதனைகளைத்தொடர்ந்து விநாயகரும் முருகப்பெருமானும் காங்கேசன்துறை துறைமுகக் கடற்கரைக்கு எழுந்தருளி இரவு 7 மணியளவில் அலங்கரிக்கப்பட்ட வள்ளங்களில் கடலில் பவனி வருவர்.

இரவு 8 மணியளவில் விசேஷமேளக் கச்சேரியும் இரவு 9 மணிக்கு பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் பேச்சும் இடம் பெறும். 10 மணியளவில் தமிழ்நாட்டிலிருந்து வரும் வித்துவான் கி. வா. ஜகந்நாதன், கொழும்புநியூலீலா அச்சக உரிமையாளரும், சமாதான நீதிபதியுமான திரு. ச. த. சின்னத்துரை அச்சேற்றி வெளியிடும் 'கோவிற் கடலை' நூலை வெளியிட்டு முருகன் பெருமைபற்றிப் பேசுவார். மாவை ஆதீனகர்த்தா கி. வா. ஜ. வுக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பார். 11 மணியளவில் அலங்கரிக்கப்பட்ட பூந்தொட்டிலில் சுவாமி மாவிட்டபுரத்துக்கு எழுந்தருளும் போது வீதியில் பல கலை நிகழ்ச்சிகளும் வாண விளையாட்டுக்களும் இடம்பெறவிருக்கின்றன.

---

சந்தை வளவில்.

(ஒப்பம்) ஆர். சி. தவராஜா,
உதவி பொலிஸ் சுப்ரீண்டன்ட்,
யாழ்ப்பாண மாவட்டம்.
பொலிஸ் கந்தோர்,
யாழ்ப்பாணம்.
20-7-66. 927

### அமைச்சர் 'திரு' சங்கானைக்கு விஜயம்

சங்கானை, புதன்

சங்கானை பட்டினசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு இம்மாதம் 19-ம் திகதி வெள்ளிக்கிழமை மின்சார வினியோகத்துக்கான ஒரு வைபவம் நடைபெற இருக்கின்றது.

இந்த வைபவத்தில் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் செனட்டர் திருச்செல்வம் விசேஷமாக விஜயம் செய்து புதிய மின்சார தீபத்தை ஏற்றி வைப்பார்.

அதன் பின்னர் நடைபெறவிருக்கும் பொதுக் கூட்டத்தில் மந்திரி சொற்பொழிவாற்றுவார். இக்கூட்டத்தில் வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஏ. அமிர்தலிங்கமும் கலந்து கொள்வார்.




### கொழும்பு

**18 8-66 வியாழன்**

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**844 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

**844 மீட்டர் & 49 மீட்டர்**

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்ப இசை.

**844 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், இசைமெட்டு.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 தமிழோடிசை பாடல், 7-00 நாள வாத்தியக் கச்சேரி, 7-30 நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 வாத்திய இசை, 9-30 நிலைய ஒலிப்பதிவுகள்.

### 3000 புதிய மாணவ ஆசிரியர்

கொழும்பு, புதன்

ஒக்டோபர் 21-ந் திகதி நடைபெறவிருக்கும் மாணவஆசிரியர் பரீட்சைக்கு ஒரு லட்சம் 25,000 பரீட்சார்த்திகள் தோற்றுவர்.

புதிதாக 3,000 மாணவ ஆசிரியர்களைத் தெரிவுசெய்யும் நோக்கத்துடன் கல்வி அமைச்சர் திரு. இரிய கொல்லை ஒக்டோபரில் இப்பரீட்சையை நடாத்தும்படி கல்விஇலாகாவுக்கு உத்தரவிட்டிருந்தார்.

இம் மூவாயிரம் ஆசிரியர்களும் தேர்தற்தொகுதி வாரியாகவே தேர்ந்தெடுக்கப்படுவர். தெரிவுசெய்யப்படும் மாணவ ஆசிரியர்கள் அவரவர் தொகுதிகளி[illegible] நியமனம்செய்யப்படுவர்.

## வரி விளம்பரம்

### திருமண அழைப்பு

சங்கரலிங்கம் - பேரம்பலம்: எங்கள் புதல்வி செல்வி ஜோதீஸ்வரிக்கும் மானிப்பாய் திருமதி இராசம்மா அமிர்தலிங்கம் அவர்களின் புதல்வன் செல்வன் சங்கரலிங்கத்திற்கும் (Inspector Telecommunications) ஆவணி மாதம் 5-ம் திகதி (21-8-66) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி தொடக்கம் 11 மணி வரையில் வரும் சுபவேளையில், யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள 45-ம் இலக்க இல்லத்தில் நடைபெறவிருக்கும் திருமணத்திற்கு நண்பர்கள் உறவினர் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். — ஆர். பேரம்பலமும் (O. A. கச்சேரி, வவனியா) பாரியாரும், 45, Hospital Road, Koddady Jaffna. 857

### விற்பனைக்கு

பொதுஅறிவு வினாவிடை

பொதுஅறிவு வினா-விடை, 20 அப்பியாசங்கள்— 2000 பொருட் குறிப்புகள்—சகல அரசினர் பகிரங்கப் பரீட்சைகளுக்கும் உரிய கைநூல். விலை ரூபா 3/- ஸ்ரீ காந்தா அச்சகம் — புத்தகசாலை, 213, கே. கே. எஸ். வீதி. யாழ்ப்பாணம். 858

### வைத்தியம்

நொய்வு, கசம் நீரிழிவு, இரத்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய சுற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணானந்தர், கைலாச பிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

வருப்புகள்:-

### தேவை

சமையற்காரர்

தோசை, இடியப்பம், வடை, மோர் தயாரிப்பதற்குத் திறமைவாய்ந்த ஒருவர் அல்லது குடும்பமாயிருப்பவர் தேவை. அவருக்கு வேண்டிய வசதிகள் செய்துகொடுக்கப்படும். இ. து. கணேசலிங்கம், தேநீர்க்கடை, மீசாலை போஸ்ட். 856

### நெசவாளர்

கைத்தறி நெசவு நிலையத்திற்கு திறமைவாய்ந்த ஆண், பெண் நெசவாளர் தேவை. 17-8-66 தொடக்கம் 1-9-66 வரை நிலயத்திற்கு நேரில் வரவும். வி. நவரத்தினம், சக்தி கைத்தறி நெசவுசாலை, டச்சு வீதி, சாவகச்சேரி. 849

### கைக்கடிகாரம் திருத்துபவர்

அனுபவம் மிக்க கைக்கடிகாரம் திருத்துபவர் உடனடியாகத் தேவை. A. M. Vijayanathan, 246, K. K. S Road, Jaffna. 859


**மகாத்மா தியேட்டர்**
(நெல்லியடி)
தினசரி 6-30, 9-30 மணி
**"பூமாலை"**
பி.ப. 4 மணிக்கு மட்டும்
**THE HELLIONS**
(Color-Scop)

**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
போயா தினங்களில் 4 காட்சிகள்
**APLAM CHAPLAM**
**அப்லம் சப்லம்**
(ஹிந்தி)

**REGAL—JAFFNA**
NOW SHOWING
Alain Delon
Ann Margret
in
**ONCE A THIEF**
(MGM's Panavision Adults Only)

**நியூ காலிங்கள்**
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
சிவாஜி - சாவித்திரி
நடித்த
**கப்பலோட்டிய தமிழன்**

**யாழ். நகரமண்டபத்தில்**
**இப்பொழுது திரையிடப்படுகிறது!**
தினசரி பி. ப. 7-00 மணிக்கு மட்டும்
— தேவ் & தேவ் அளிக்கும் —
# பாச நிலா
யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்பட்ட
முதல் முழுநீள 16 மி. மீட்டர் தமிழ்ப் படம்
(பாதி கலரில் -காந்தஒலி)
(Processed in Germany — Sound Striped in Canada)
நடிகர்கள்:
**செல்வராஜன் – ரஞ்சி செல்வராஜன்**
**மனோகரன், ஜெயந்திரா**
**ஐடா தேவேந்திரன்**
முதலியோர்
டிக்கட்: ரூபா 5, 3, 2.

**வெள்ளி முதல்**
கிங்ஸ்லி பிளாஸா நவா
(கொழும்பு) (வெள்ளவத்தை) (கொம்பனித்தெரு)
வெலிங்டன் விஜயா ஸ்ரீகிருஷ்ணா
(யாழ்ப்பாணம்) (மட்டக்களப்பு) (திருமலை)
**ரி. எம். சௌந்தரராஜன்**
**பி. எஸ். சரோஜா**
எம். ஆர். ராதா, மனோகர்,
சாரதா, லட்சுமி, ராஜம்
மற்றும் பலர் நடித்த
# அருணகிரிநாதர்
இசை: காலஞ்சென்ற ஜி. ராமநாதன், ரி. ஆர். பாப்பா
டைரக்ஷன்: ராமண்ணா

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
காமினி பொன்சேகா - ஜீவராணி நடித்த
**சனசும கொத்தனத்த**
(சிங்களம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெலிபோனில் அழைத்து எயிற்றி கிளப்பில் விபரம் தெரிவித்தார்

# கம்யூனிஸ்ட் புரட்சி; சுகர்ணோ கண்டனம்

## வியட்னாமில் மத்தியஸ்தம் செய்யவும் தயாராம்

ஜாகர்த்தா, அக். 17

சமீபகாலத்தில் இந்தோனேஷியாவில் ஏற்பட்ட கம்யூனிஸ்ட் ஆதரவு புரட்சியை இன்று ஜனாதிபதி சுகர்ணோ [illegible] தன்முதலாகக் கண்டித்தார்.

இந்தப் புரட்சி முயற்சியை அரசாங்கம் கண்டித்திருப்பது தெரிந்ததே. அதை இப்பொழுது நானும் கண்டிக்கின்றேன் என்று அவர் கூறினார்.

இந்தோனேஷிய சுதந்திரதினத்தையொட்டி நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் சுகர்ணோ பேசினார்.

நேற்றையதினம் ஜனாதிபதி சுகர்ணோ, 1960-ம் ஆண்டுக்குப் பின் முன்தடவையாக பார்லிமெண்டில் பேசியபோது இந்தோனேஷியாவில் இன்னும் தாமே தலைவராகவிருப்பதாகவும் ஆட்சிபீடத்திலுள்ள மற்றவர்கள் எல்லாம் தமக்கு உதவியாளர்கள் என்றுக் குறிப்பிட்டார்.

சுதந்திரதினக் கூட்டத்தில் ஜனாதிபதி சுகர்ணோ பேசியபோது வியட்னாம் நிலைமைபற்றியும் குறிப்பிட்டார்.

ஆசிய நாடுகள் தம் பிரச்னைகளைத் தாமே தீர்த்துக் கொள்ள அனுமதிக்க வேண்டும். அந்த அடிப்படையில் வியட்னாம் தகராறில் இந்தோனேஷியா மத்தியஸ்தம் செய்வதற்கு தயாராய்

(5-ம் பக்கம் பார்க்க)

## கோதபயா கொலை வழக்கு

### வயோதிபர் சாட்சியம்

கொழும்பு, புதன்

''பெப்ரவரி மாதம் எட்டாம் திகதி காலை வயோதிபர் ஒருவர் கிணற்றில் தண்ணீர் எடுப்பதற்காக வந்தார், அவர் கிணற்றை எட்டிப்பார்த்தபொழுது சடலமொன்று மிதப்பதைக் கண்டார். இச்சம்பவத்தை அறிந்தநானும் கிணற்றடிக்குப் போய் அச்சடலம் மிதப்பதைக் கண்டேன்,' என்று இரம்பந்தகோதபயாகொலை வழக்கு விசாரணை இன்று காலை மீண்டும் கொழும்பு தெற்கு மாஜிஸ்திரேட் திரு. சிவ செல்லையா முன்னிலையில் நடைபெற்றபொழுது இரத்மலானை அர்ச். நிடார் தேவாலயத்தைச் சேர்ந்த 50 வயதுள்ள அல்பேர்ட் பெரேரா சாட்சியமளிக்கையில் கூறினார்.

''நான் அயலவர்களிடம் இதுபற்றிச் சொல்லிவிட்டு கல்கிசை பொலிசாரிடம் முறையிட்டேன். பொலிசார் என்னுடன் வந்து சடலத்தை வெளியே எடுத்தனர். இச்சடலம் ஒரு சிறுவனுடையது, அச்சிறுவனை நான்முன்னர் கண்டதில்லை'' என்றும் அவர் கூறினார்.

## குறுக்கு விசாரணையில் சந்திரசோமா சாட்சியம்

கொழும்பு, புதன்

நண்பகல் இடைவேளைக்குப் பின்னர் சதிவழக்கு விசாரணைகள் மீண்டும் ஆரம்பமானதும் முதல் சாட்சி எம். சந்திரசோமா, எதிர்தரப்பு வழக்கறிஞரால் குறுக்குவிசாரணை செய்யப்பட்டார் குறிப்பிட்ட பெண் தம்மை முதலில் டெலிபோனில் அழைத்துப் பின்னர் எயிட்டி கிளப்பில் சந்தித்தாரென்றும், அப்பெண்ணுக்குத் தெரிந்த ஒரேயொரு அரசாங்க அதிகாரி நான் தானென்ற காரணத்தினால் தான் அப்பெண் என்னிடம் தகவல் தெரிவித்ததாகத் தம்மிடம் கூறியதாகவும் திரு. சந்திரசோமா தெரிவித்தார்.

முதல் சாட்சி திரு.எம். சந்திரசோமாவைகுறுக்கு விசாரணை செய்த எதிர்தரப்பு வழக்கறிஞர் திரு. சந்திரசோமாவிடம் அவரது அரசியல் வாழ்வு, சமயவாழ்வு, சோதிடம்பற்றிய நம்பிக்கை குடிவகைப்பழக்கங்கள்பற்றி கேள்விகள் கேட்டார்.

நான்காவது எதிரி மேஜர் ஜெனரல் உடுகம சார்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு. சந்திரசோமாவை குறுக்குவிசாரணை செய்கையில, ''குறிப்பிட்ட பெண் எக்கட்சியிலும் சார்பில்லாதவரென்றும் அரசாங்கத் துறை அதிகாரிகளில் தம்மை வெகுவாகத் தெரிந்திருந்ததாலேயே தம்மிடம் அப்பெண் தகவல்களை டெலிபோன் மூலம் தெரிவித்திருந்தார் என்றும் தெரிவித்தார்.

தமக்கு டெலிபோன் செய்து 'எயிட்டி' கிளப்பில் சந்தித்த அப்பெண்ணின் பெயரை எக்காரணம் கொண்டும் தெரிவிக்க முடியாதென்றும் இதுவரை அப்பெண்ணின் பெயரை தாம் யாரிடமும் சொல்லவில்லை என்றும் திரு. சந்திரசோமா கூறினார்.

திரு.சந்திரசோமாமேலும் சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது: திரு. டொரிக் டி சூசாவை பத்து, பன்னிரண்டு தடவைகள் நான் அவரது இல்லத்தில் சந்திப்பேன். ஆனால் அவரோடு அரசியல் பற்றி ஒருபொழுதும் கதைத்ததில்லை. போயா தினங்களுக்கு முன்பும், போயா தினங்களிலும் சிங்களவிளையாட்டுக் கிளப்புகளில் 'பிலியட்ஸ்' விளையாடுவதுண்டு. நான் 24 மணிநேரமும் பௌத்த மத கோட்பாடுகளை அனுஷ்டிக்கும் சுத்தமான பௌத்த மதத்தவன்.''

வழக்கறிஞர்: ''போயா தினங்களில் பிலியட்ஸ் விளையாடுவதும், விஸ்கி அருந்துவதும்தானா?''

சாட்சி: ''ஆம். அது எனது வேலை. எனது பௌத்த மதம் எனக்கே தனிப்பட்டது. அதைப்பற்றி நான் யாரிடமும் விவாதிப்பதில்லை பௌத்த கோவில்களுக்குப் போகாமலே பௌத்தமதத்தைப் பேணுபவன். இதை எனது மனைவியிடம் கூறியிருக்கிறேன். மற்றவர்களின் தொண்டைக்குள் பௌத்தமதத்தைத் திணிப்பது நான் விரும்பாத ஒன்று. நான் பௌத்த மதத்தின் பஞ்சசிலங்களையும் அறிந்துள்ளேன்.''

### அரசியல் வாழ்வு

அரசியல் வாழ்வு பற்றிக் குறுக்குவிசாரணை செய்யப்பட்டபொழுது திரு. சந்திரசோமா தெரிவித்ததாவது; ''நான் எந்த அரசியல்கட்சி சார்புமில்லாதவன். ஆனால் சோஷலிஸத்தில் நம்பிக்கை உள்ளவன்.

சோதிடத்தில் தாம் வைத்திருக்கும் நம்பிக்கை பற்றி சாட்சி தெரிவிக்கையில் 'கிளப்'பில் சோதிடம் பற்றித் தாம் விவாதிப்பதுண்டு என்று கூறினார்.

அரசாங்கத்துக்குத் தீமையான காலம் பற்றி 'கிளப்'பில் விவாதிக்கப்பட்டதாகவும் கூறிய சாட்சி, தமக்குச் சோதிடம் பற்றி அதிகம் தெரியாதென்று தெரிவித்தார்.

திரு டொறிக் டி சூசாவுடன் தாம் தனிப்பட்ட விஷயங்கள் குறித்து விவாதிப்பதுண்டு என்றும் அவர் கூறினார்.

### சூசா அறிக்கை

''செனட் சபையில் திரு. சூசா [illegible]றிக்கையொன்றை வெளியிட்ட பின்னர் நான் அவரைச் சந்தித்தேன். ஆனால் அவருடன் நான் பேசவில்லை. சூசா அறிக்கை வெளியிட்ட பின்னர் ஸாவி பராக்கிரமாவை நான் சந்தித்தேன். அவரைச் சந்தித்தபொழுது சூசாவினது அறிக்கை பற்றி நான் அதிர்ச்சி தெரிவித்தேன். டொறிக் டி சூசா தெரிவித்திருந்த விஷயங்கள் பற்றி நான் பொலிஸாருக்கு அறிவிக்கவில்லை. ஆனால் நிரந்தரக் காரியதரிசி திரு ஜி. பி. சமரசிங்காவிடம் தெரிவித்திருந்தேன். இவ்வளவும் போதுமென்றே அப்பொழுது நான் கருதினேன். பொலிஸாரிடமோ அல்லது மாஜிஸ்திரேட்டிடமோ இது பற்றித் தெரிவித்திருக்க வேண்டுமென்று நான் அறிந்திருக்கவில்லை. இதனை ஒரு குற்றமாகக் கருதி எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் என் மீது குற்றஞ் சுமத்தினால் அதை நான் ஏற்றுக்கொள்வேன். இதுபற்றிய சட்ட விஷயங்கள் எனக்குத் தெரியாது'' என்று திரு. சந்திரசோமா தெரிவித்தார்.

இப்படியொரு சம்பவம் இனிமேல் நடைபெறுமானால் மாஜிஸ்டிரேட்டிடம் கண்டிப்பாகத் தெரிவிப்பேன் என்று சாட்சி கூறிய போது கோர்ட்டில் பலமான சிரிப்பொலி கிளம்பியது.

நீதிமன்றம் நாளைக் காலை 9-30க்கு மீண்டும் கூடும்.

# கணேசபுரம் கொலை வழக்கில் எதிரிகள் விடுதலை

யாழ்ப்பாணம், வியாழன்

கணேசபுரம் கொலைவழக்கில் எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர். இவ்வழக்கு நேற்றுக்காலை வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் பி. சிறிஸ்கந்தராசா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

விசாரணை நடுவில் ஜூரி சபையினர், விசாரணையை தொடரவிரும்பவில்லையென ஏகமனதாகத் தெரிவித்ததை தொடர்ந்து நீதியரசர் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

விசாரணை விபரம் வருமாறு:

''யாக்கோப் நில்லடா என்று சத்தம் கேட்டது. அந்தக்குரல் 1-ம்எதிரியுடையதென அடையாளங் கண்டுகொண்டேன். நான்டோர்ச் அடித்துப் பார்த்தபொழுது யாக்கொப் ஓடிவந்தார். 1-ம், 2-ம் எதிரிகள் சயிக்கிளில் வந்தனர். 2-ம் எதிரி யாக்கொப்பின் தலையில் பொல்லால் அடித்தார். 1ம் எதிரி கத்தியால் ஓங்கிக் குத்தினார்.

கணேசபுரம் கொலை வழக்கில் சாட்சியமளித்த தம்பையா மேற்கண்டவாறு கூறினார். இவ்வழக்கு நேற்றுக்காலை வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் பி சிறிஸ்கந்தராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் 65-ம்ஆண்டு டிசம்பர் 24-ம் திகதி மண்கும்பானில் சுந்தரம் தியாக

(5-ம் பக்கம் பார்க்க)

## உயர் அதிகாரி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பிரிட்டிஷ் ஹைகமிஷனில் உள்ள அதிகாரிகளுக்குத் தெரிவித்துள்ளார்கள்.

'1964ம் வருடத்தில் இரு உயர்தர இரகசிய பொலிஸ் அதிகாரிகளான திரு ஜோன் அட்டிகலை, திரு. எல். எம். பி. டி. சில்வா ஆகியோர் பிரிட்டிஷ் ஹைகமிஷனுக்காக ஒற்றுக்கேட்டுத் தகவல் தெரிவித்ததாக எனக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. அதுபற்றி நான் அப்போது பிரதமராக இருந்த திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்குத் தெரிவித்திருந்தேன். அது பாரதூரமானதொரு விஷயம் என்றும் நான் அவருக்கு எடுத்துக்கூறி, அது பற்றி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா நடவடிக்கை எடுக்கவேண்டுமென எடுத்துக் கூறியிருந்தேன்.

1960ம் வருடத்தில் அப்போது பிரதமராக இருந்த திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா மற்றும் மந்திரிகள் ஆகியோரது தொலைபேசிகளும் ஒற்றுக்கேட்கப்பட்டன.

## இசைவிழா

மீசாலை, வியாழன்

மீசாலை தமிழிசைச்சங்க இசைவிழா 2-ம்நாள் நிகழ்ச்சிகள் வருமாறு:

மாலை 7-30—9-00 திரு இநா சண்முகலிங்கம் பாட்டு, 9-00 — 915 தலைமைப் பேருரை: திரு எம் சி சுப்பிரமணியம் (சமாதானநீதிபதி) 9-15—9-30 திரு. இ.த.சுப்பிரமணியம் பேச்சு, 9-30—11-30 திரு. அ. ஞா. ஐயாக்கண்ணு தேசிகர் பாட்டு.

## ஈரான் மன்னர் கவலை

புதுடில்லி, ஆக. 17

புதுடில்லியில் சுதந்திர தினத்தில் ஏற்பட்ட பூமி அதிர்ச்சி குறித்தும் அதனால் ஏற்பட்ட கஷ்டங்கள் குறித்தும் ஈரான்மன்னர் இந்திய ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணனுக்கு அனுதாபச் செய்தியொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

## இந்தியாவில் இலங்கை கொப்பரா

புதுடில்லி, ஆக. 17

இலங்கையிலிருந்து கொப்பரா இறக்குமதி செய்யப்படுவது குறித்து கேரளாவிலுள்ள கொப்பரா உற்பத்தியாளர்கள் கவலைகொள்ளத் தேவையில்லையென்று இந்திய அரசாங்கம் அறிவித்திருக்கின்றது.

## பனைமரத்துடன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்றிரவு ஏழு மணிக்கு மல்லாகம் பதில் நீதிபதி திரு ஜி வி பாலசிங்கம் மரண விசாரணை நடத்தினர். காங்கேசன்துறை பொலிஸ் நிலையத் தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. எஸ். வி.மூர்த்தி சாட்சிகளை ஆஜர் செய்தார்.

சாரதியை 1000 ரூபா பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டுமேல்விசாரணையை இம்மாதம் 25-ந் திகதிக்கு பதில் நீதிபதி ஒத்திவைத்தார்.

## திருமணம்

ஜெகநாதன் — லலிதா எங்கள் மகன் ஜெகநாதனுக்கும் லலிதா தம்பிஐயாவுக்கும் இம்மாதம் 19-ந் திகதி வெள்ளிக்கிழமை இரவு 8 மணிக்கு நல்லூர் செட்டித்தெருவில் 20 ஆம் இலக்க இல்லத்தில் நடைபெறும் திருமணவைபவத்துக்கு நண்பர்களையும் உறவினர்களையும் அன்புடன் அழைக்கிறோம். தனிப்பட்ட அழைப்புகள் அனுப்பப்படவில்லை என்றும் அறிவிக்கிறோம்.

பொ. தியாகராஜா தம்பதிகள். 310 நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

844

## 'ஒற்றுமை அவசியம்'

வட்டுக்கோட்டை, புதன்

வட்டுக்கோட்டை பலநோக்க கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக்கூட்டம் வட்டு. திருஞானசம்பந்த வித்தியாசாலை மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. ம. கதிரவேலு தலைமையில் நடைபெற்றது.

சங்க வளர்ச்சிக்கு அங்கத்தவர்கள் ஒற்றுமை அவசியமென்று தலைவர் தமது தலைமையுரையில் வற்புறுத்தினார்.

## மரண அறிவித்தல்

### நாகம்மா

ஆரியகுளம் மு. சி. வேலுப்பிள்ளையின் அருமை மனைவியும், குலசேகரம், சபாரத்தினம், தனேஸ்வரி ஆகியோரின் சிறியதாயும், திருவாளர் விக்கினராசா, திருமதி யோகமணி சபாரத்தினம் அவர்களின் மாமியாரும், திருமதி மகேஸ்வரி ஜெயராசசிங்கம், திருமதி அன்னம்மா சண்முகம் ஆகியோரின் சகோதரியும், திருமதி உலகநாதன் நவமணி ஆகியோரின் பெரிய தாயும் ஆகிய திருமதி நாகம்மா வேலுப்பிள்ளை சிவபதம் எய்தினர். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று காலை 10 மணிக்கு வில்லூன்றி மயானத்தில் நடைபெறும். 861

இப் பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸெல்கோவில் மேலை வீதி. 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-[illegible] [illegible] மாதம் 18-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்[illegible]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org